# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

▪ தடி-2, அடி-6 ▪ செப்டம்பர் 2018 ▪ தனிச்சுற்றுக்கு மட்டும் ▪ நன்கொடை ரூ.20

## பற்றுக பற்றற்றான் பற்றினை

தந்தை பெரியார் பிறந்தநாள் சிறப்புக் கட்டுரை








**பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்**

உலகைப் படைத்தது கடவுள் என்றால்,
கடவுளைப் படைத்தது யார்?




தந்தை பெரியார் 140வது பிறந்தநாள் வாழ்த்துகள்
ஜோதி
நாற்றங்கால் மையம்
வேகாக்கொல்லை அஞ்சல்,
பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம் – 607 302.
கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.
– தந்தை பெரியார்
எங்களிடம் மலைவேம்பு, வீரிய ரக சவுக்கு மற்றும் அனைத்து மரக்கன்றுகளும், பழ செடி, மலர் செடிகள் குறைந்த விலையில் தரமானதாக கிடைக்கும்.
உரிமை: நா.பஞ்சமூர்த்தி
கடலூர் மாவட்ட இளைஞரணி செயலாளர் திராவிடர் கழகம்
கடலூர் மாவட்ட செயலாளர், நாற்றங்கால் உற்பத்தியாளர்கள் சங்கம்
செல்: 93676 31024, 75020 13837





"வாழ்க்கை அவனவன்
வாழ்வதற்கு என்று
மட்டும் கருதக்
கூடாது மற்றவர்கள்
நலனுக்கும் என்று
கருத வேண்டும்."
-தந்தை பெரியார்

கிருட்டிணகிரி
மாவட்டத் தலைவர்
சுயமரியாதை சுடரொளி
காவேரிப்பட்டணம்
**மு.தியாகராசன்**
குடும்பத்தின் சார்பாக
'தந்தை பெரியார்'
140வது பிறந்தநாள்
வாழ்த்துகளைப்
பகிர்ந்துகொள்கிறோம்!



இவண்:
**தி.கதிரவன்**
(அன்பு ஆப்செட், காவேரிப்பட்டணம், கிருட்டிணகிரி.
செல்: 98429 32429)


## தந்தை பெரியார் 140வது பிறந்தநாள் வாழ்த்துகள்



திராவிடம் கொண்டு ஆரியத்தை விரட்டிட
பேரிடியாக வந்த ஈரோட்டு சூரியனே!
பூணூலின்சாணக்கியத்தனத்திற்கு
சவுக்கடியாக வந்த வைக்கம் வீரரே!
கல்விகற்றறிய ஒருசாதி கைக்கூலியாக
பல சாதி எனும் பாகுபாட்டை
நொறுக்க வந்த பகுத்தறிவு பகலவனே!
வளைந்துகொண்டிருந்த இனமானத்தை
உயர்த்தி நிறுவிய இனமானம் காத்த இமயமே!
ஆணாதிக்கத்தை அறிவுகொண்டு உடைத்து
பால் பேதத்தை சமத்துவமாக்கிய
வெண்தாடி வேந்தரே!
இருள் அண்டிக்கிடந்த இனம்
இட ஒதுக்கீடுபெற்றுயர போராடிய
சுயமரியாதை சுடரொளியே!
புகழ்மாலைகளை புழுதியாய் ஒதுக்கிய
பொதுத்தொண்டராகிய
தென்னாட்டின் சாக்ரடீஸே!
உலக மேன்மைக்கு பாடுபட்டதால்
யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்ட
உலகில் சிறந்த பகுத்தறிவாளரே
உம்மால் அறிவு பெற்றோம்!
ஆற்றலும் கொண்டோம்!
உலகுள்ளவரை உம் புகழ் மங்காது!
எட்டுத்திக்கும் ஓங்கி ஒலிக்கும்!
எம் தந்தை பெரியார்
வாழ்க வாழ்க வாழ்கவே!

*- திராவிடராசன்*
எழுத்தாளர்



மானமீட்பர் தந்தை பெரியார் 140வது பிறந்தநாள் வாழ்த்துகள்

# என் பிறந்தநாள் விழா




**தோழர்களே!**

பிறந்த நாள் விழா என்பது முதன் முதலில் துவக்கப்பட்டது எல்லாம் பொய் - பித்தலாட்டங்களை அடிப்படையாக வைத்ததுதான். எப்படி எனில் இதுவரை கடவுள்களின் பிறந்தநாள் என்ற பெயரில் தான் நம் நாட்டில் விழாக் கொண்டாடப்படுவது வழக்கம். உண்மையிலேயே இந்தக் கடவுள்கள் எல்லாம் இருந்தார்களா? பிறந்தார்களா? என்றால் அதுதானில்லை.

அப்படி அவர்கள் கொண்டாடியதன் நோக்கம். அதை வைத்து மக்களிடத்தில் பக்திப் பிரச்சாரத்தைச் செய்யலாம் என்பதற்காகத்தான்; அதில் வெற்றியும் பெற்றார்கள். அடுத்து நாயன்மார், ஆழ்வார் ஆகியவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடி வந்தார்கள்; அவர்கள் எல்லாம் கடைந்தெடுத்த பித்தலாட்டக்காரர்கள். அவர்கள் செய்யாத காரியங்களை எல்லாம் இட்டுக்கட்டிச் சொல்லி அவர்களுக்குப் பெருமையை உண்டாக்கி அதன் மூலம் கடவுள்களைப் புகுப்பிக்க ஏற்பாடு செய்து விட்டனர்.

எந்த அயோக்கியத்தனமான பொய்யை எல்லாம் சொல்லியும் கடவுள் பக்தியை உண்டாக்கவே இவற்றையெல்லாம் செய்தனர்.

நம் இயக்கம் தோன்றி அறிவுப் பிரச்சாரம் செய்ததற்குப் பின்னால் தான் உண்மையிலேயே பிறந்த மனிதர்கட்கு, மனிதத் தொண்டு செய்த பெரியார்கட்குப் பிறந்தநாள் கொண்டாடும் தன்மை ஏற்பட்டது.

எனக்குப் பிறந்தநாள் கொண்டாடுவதின் நோக்கம், கடவுளை ஒழிப்பதாகும். இதைப் போன்ற கருத்துகளில் இப்போது மக்கள் உற்சாகம் காட்டுகிறார்கள். நாடெங்கும் என் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுகிறார்கள் என்றால் நோக்கம் அதுதான்.

மற்றவர்கட்கு விழா நடக்கிறது என்றால் அது சாதி வளர்க்கவும் கடவுள் பக்தியை வளர்க்கவும் பயன்படுமே தவிர, உருப்படியாக சமுதாய வளர்ச்சிக்கு எள்ளளவும் பயன்படாதே. எங்களுக்கு விழா நடக்கிறது என்றால், அவற்றிற்கு மாறுபட்ட கொள்கையைப் பிரச்சாரம் செய்வதால்தான் ஆகும்.

**(மாயூரத்தில்,**
**22–9–1972ல் சொற்பொழிவு**
**“விடுதலை”9:10–1972)**



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
நடமாடும் மனிதனுக்கு ஒண்டக் குடிசையில்லை
ஆனால் நடமாடாக் கற்சிலைக்கு கோயில் ஒரு கேடா?

# கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

உதவி ஆசிரியர்:
**கா. தமிழரசன்**

ஆசிரியர் குழு:
**புலவர் நாகை பாலு** த.மு.எ.ச.
**முனைவர் கு. முருகேசன்**
**முனைவர் ச.அருண்பிரகாஷ்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன், ஜோதி வெங்கடாஜலபதி**

ஓவியர்கள்:
**ஓவியர் ரா.ராஜசேகர்**
**தனுவசி சி.தர்மராஜ், ஓவியர் சிகரன்,**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப்,** 76677 55673

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி,**
**தே.சுரேஷ், அரவிந்த்,**
**கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா,** வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்,** வழக்கறிஞர்

ஆசிரியர் குழு - அலுவலக முகவரி

கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

**மதி பப்ளிகேசன்**
2/343, காமலாபுரம் (கி), மல்லிக்குட்டை (அ),
காரிமங்கலம் (வ), தருமபுரி - 635 205.
அலைபேசி: 73733 33078
மின்னஞ்சல்: kaithadimonthly@gmail.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| பற்றுக பற்றற்றான் பற்றினை | 7 |
| கலைஞர் மீது ஏனிந்தக் கோபம் | 10 |
| 35 வயதிற்கு பிறகான கர்ப்பம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் | 11 |
| பெரியார் தங்கம் அண்ணா நகை | 12 |
| எது சுதந்திரம்? | 14 |
| கலைஞருக்கு மரணமில்லை - கவிதை | 16 |
| வடலூர் துரை. சந்திரசேகரன் நேர்காணல் | 20 |
| பெண்ணுரிமை விஞ்ஞானி பெரியார் | 21 |
| தமிழர் விளையாட்டுகள் - உறியடித்தல் | 22 |
| மதவாதமும் பலாத்காரமும் | 24 |
| அய்ம்பது ஆண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியில் தமிழகம் வளர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா? | 25 |
| "சோடா வேணும்..." | 28 |
| மந்திரமா? தந்திரமா? | 29 |
| எச்சில் தொட்டி - தொடர்கதை | 30 |
| நதியோடிய இடமெல்லாம்... - கவிதை | 32 |


| கைத்தடி சந்தா விபரம் | தனி இதழ் ₹ 20 |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 250 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 470 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 950 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1200 |

A/C NO: 34939017347
IFSC CODE : SBIN0000832
NAME : ARIVAZHAGAN.C
PHONE NO : 7373333078
State Bank of India, Dharmapuri



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
குழந்தைப் பெறுவது கடவுள் செயல் என்றால்,
விதவையும், வேசியும் குழந்தை பெறுவது யார்செயல்? ஏன்?

வழக்கறிஞர் **அ.அருள்மொழி**



# பற்றுக பற்றற்றான் பற்றினை

## செப்டம்பர் 17

### தந்தை பெரியார் பிறந்தநாள்

**140** ஆண்டுகள் ஆகின்றன. தந்தை பெரியார் பிறந்து, 17.09.1879. 18-ஆம் நூற்றாண்டில் இளமைப் பருவ அனுபவங்கள், 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வணிகம். பொது நிர்வாகம். ஊர்த்தலைவர். நகரசபையின் தலைவர். வணிகர் சங்கங்களின் தலைமை வழிகாட்டி. காங்கிரசு இயக்கத் தொண்டர். கதர்ப் பிரச்சாரகர். வைக்கம் சத்யாகிரகி. கள்ளுக்கடை ஒழிப்பாளர். காங்கிரசு இயக்கத்திற்குள் சமத்துவதற்காகக் குரல் கொடுத்த கலகக்காரர், 19-ஆம் நூற்றாண்டின் கால் பங்கு முடியும் போது. காங்கிரசு இயக்கத்தை ஒழிப்பேன் என்று சூளுரைத்து தனிச் பிரச்சாரம் தொடங்கியவர், குடியரசு என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இதழை நடத்தியவர், அதன் ஆசிரியர் பொறுப்பில் தங்கப்பெருமாள் பிள்ளை, தமிழறிஞர் சாமி. சிதம்பரனார், ஈ,வெ,கிருஷ்ணசாமி, அ,பொன்னம்பலனார், குத்தூசி குருசாமி வெளியீட்டாளர்களாக. நாகம்மையார், கண்ணம்மையார் போன்ற ஆளுமைகளைக் கொண்டு உள்ளூர் மக்களின் ஊழல். ஒழுங்கின்மை முதல் கொண்டு உலகப் போர்கள் வரை பகுத்தறிவு. சமதர்மம் என்ற இரண்டு கொள்கைகளைக் கொண்டு தண்டவாளத்தினின்று தடம் மாறாத ரயில் போல் பயணம், சூறாவளி போல் பொது வாழ்வு. சுயமரியாதை இயக்கம். நீதிக் கட்சியில் தலைமை திராவிடர்கழக உருவாக்கம். பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு,கருணாநிதி, அன்னை மணியம்மையார், ஆசிரியர் கி.வீரமணி என்ற நான்கு பெரும் ஆளுமைகள் அவர் சீடர்களாக இருந்து செயல்பட்ட காலகட்டம், இந்திய விடுதலை அறிவிக்கப்பட்ட 1947 ஆகஸ்டு 15-இல் கலைஞர் அவர்களும் தேர்தல் அரசியல் பாதையைத் தேர்ந்தெடுக்க. 1948-இல் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் பதிவுடன் முடிந்தது, அரை நூற்றாண்டு 1950 முதல் அரசியல் சாசனத்தை எதிர்த்துப் போராட்டம், மொழிவாரி மாநிலங்கள் அமைப்பில் தமிழ்நாட்டு உரிமைக்கான போராட்டம். சாதி ஒழிப்பிற்காக அரசியல் சட்ட எதிர்ப்பு, இட ஒதுக்கீடு சட்ட திருத்தம். இராமன் பட எரிப்பு. மூட நம்பிக்கை ஒழிப்பு என போராட்டம், போராட்டம், போராட்டம். 1925-க்குப் பின் வந்த 50 ஆண்டுகளில் ஒவ்வொரு கிளையாக வெட்டப்பட்ட பெண்ணடிமை எனும் நச்சுமரம் அதை நீரூற்றி வளர்த்த வேதப் பாதுகாவலர்கள் பதறப் பதற அணி அணியாய் பெண்கள் வீட்டுச் சிறையுடைத்து பொது வெளிக்கு வந்தார்கள், அந்தப் பண்பாட்டுப் புரட்சியை உலகின் எந்த நாடும் இவ்வளவு குறைந்த காலத்தில் கண்டதுமில்லை. வென்றதுமில்லை,

பொது மகளிர் என பொட்டுக் கட்டப்பட்ட பெண்கள் அதனை மறுத்து. அறுத்தெறிந்து நான் ஒருவனின் மனைவி மட்டுமே என்று தாலி அணிந்து நிமிர்ந்து நின்றார்கள், இல்லாள் என்ற பட்டத்துடன் ஒரு உரிமையும் இல்லாமல் ஒருவனது அடிமையாக. உரிமைப் பொருளாக தாலி என்ற



முத்திரை குத்தப்பட்டு அடி வாங்க முதுகையும். உயிர் வாழப் பிள்ளைகளையும் சுமந்து திரிந்த பெண்கள். நான் இனி அடிமையல்ல என்று கல்விக் கூடம் சென்றார்கள். ஆசிரியர்களானார்கள், அரசியல் மேடைகளில் அதிகாரம் கேட்டு முழங்கினார்கள், விதவைக் கோலம் ஒழிந்தது, மறுமண உரிமை எழுந்தது, பிள்ளைகளின் பெயருக்கு தாயின் பெயரை முதல் எழுத்தாகப் போடும் பண்பாடாக தயக்கமின்றி முன்னெடுத்தது. அரசுப் பணியாளர்களாக. அதிகாரிகளாக. நீதிபதிகளாக பெண்களை எழுச்சி கொள்ளச் செய்தது, மானுடத்தின் மகத்தான சாதனை. பெண்ணும் ஆணும் நிகரெனச் சொல்வதே, அதை வென்று காட்டிய வரலாற்றை இந்த அரை நூற்றாண்டில்



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
கடவுள் படை இருக்க, எல்லையில் காவல்படையினர் ஏன்?

செய்து காட்டினார் ஈ.வே.ரா.என்று பாராட்டி அவரை இனி பெயார் என்றே அழைப்போம் என்று அழிக்க முடியாத வரலாற்றுச் சாசனத்தை அறிவித்தார்கள், அறிவுலகை முன்னெடுத்துச் சென்ற பேராளுமைகளான நீலாம்பிகை, மீனாம்பாள் சிவராஜ பண்டிதர் நாராயணி. மூவலூர் ராமாமிர்தம், டாக்டர் தருமாம்பாள் ஆகியோர். இன்று தமிழ்நாட்டுப் பெண்களின் வெற்றிக்கு மகுடம் வைத்த காட்சியாக எண்ணற்ற மருத்துவர்கள், பேராசிரியர்கள், காவல்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள், பொறியாளர்கள், தொழில் முனைவோர், தொண்டு நிறுவனப் பணியாளர்கள், ஊடகத் துறை வல்லுநர்கள், நடத்துநர்கள் அனைத்திற்கும் உச்சமாக தமிழ்நாட்டின் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்காக 12 பேர் பெண் நீதியரசர்கள் என்றால் கேட்கவே வியப்பாக இருக்குமே.



**இப்படி ஒரு தலைவரால் சிந்திக்கவும், போராடவும், சாதிக்கவும் முடியுமா என்று நினைத்துப் பார்த்தால் மேலும் மேலும் வியப்புக்குறிகளே தோன்றுகின்றன. இத்தனையும் செய்து காட்டுவதற்கு ஒருவருக்கு என்ன நோக்கம், இலக்கு இருக்க முடியும்?**

தமிழ், தமிழர், தமிழ் இலக்கியம், பண்பாடு, திருக்குறள், பொங்கல் திருவிழா, தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு, குடும்பத்தில் தமிழ்ப் பெயர்கள், கோயிலில் தமிழ் அர்ச்சனை, தமிழர் அர்ச்சகர் என்ற மொழி. இனப் பண்பாட்டு எழுச்சியை தந்தை பெரியாரின் பேச்சும், எழுத்தும் தான் உருவாக்கின. தமிழ் உணர்வுடன் தமிழர்கள் முன்னேற ஆங்கிலம் அவசியம் என்று தயங்காமல் பேசிய பெரியாரின் கருத்தை எதிர்த்தவர்கள், அவரது நோக்கம் அடைந்த வெற்றியினைக் கண்டு வியந்தார்கள். ஜப்பானைப் போல், சீனாவைப் போல் தாய் மொழியிலேயே படிக்க வாய்ப்புகளை உருவாக்குவதே சிறந்தது, ஆனால் அந்த நாடுகளில் வேற்று மொழியை தெய்வ மொழியாக, வேதமொழியாகக் கற்பித்து தாய்மொழி வளர்ச்சியைத் தடுப்பவர்கள் யாரும் இருந்ததில்லை. நம் நாட்டில் அப்படி ஒரு இனமே வாழ்கிறது என்பதோடு அவர்கள் ஆதிக்கத்தில் தான் நம் நாடு இருந்தது, இருக்கிறது.

அவர்கள் தான் ஆங்கிலேயர்களுக்கு வழிகாட்டிய துபாஷிகள் (துவிபாஷி இரண்டு மொழி பேசுபவர்கள்) அவர்களே. ஆங்கிலம் கற்று ஆங்கிலேயர்கள் வகித்த பதவிகளில் பங்கு வாங்கி நாங்களே அறிவாளிகள், ஆங்கிலமே உலக அறிவு என்று பரப்பி வைத்திருந்த வலைப் பின்னலை அறுத்து, தமிழர்கள் அனைத்துப் பதவிகளுக்கும் தகுதியானவர்கள் என்ற நிலையினைப் பெற அவர் நடத்திய போராட்டங்கள் எத்தனை, பட்ட அவமானங்களின் தழும்புகள் எத்தனை கணக்கில்லை, காமராசர், அண்ணா, கலைஞர் என்று தமிழ்நாட்டின் ஆட்சியாளர்கள் தந்தை பெரியாரை நினைவு கூர்ந்து தான் எந்த சமூக மேம்பாட்டுத் திட்டத்தையும் அறிவித்தார்கள் என்பதும், அவர் காலத்திலேயே அது நடந்தது என்பதும் கூட உலகில் பல சிந்தனையாளர்களுக்கும். தலைவர்களுக்கும் கிடைக்காத வாய்ப்பு,

தந்தை பெரியாரின் பொருளியல் கோட்பாடுகளை நாம் முறையாக ஆய்வுக்கு உட்படுத்தவில்லை, ஆனால் அவரது ஆய்வு எப்போதும் தொழிலாளர் நலம் சார்ந்ததாகவே இருந்தது, கதர் என்பது சுதேசிப் போராட்டம், சுயராஜ்யத்துக்கான அடித்தளம் என்று காந்தியின் வழியில் எல்லோரும் பேசினார்கள். ஆனால் கதருக்கும், சுயராஜ்யத்திற்கும் என்ன தொடர்பு, இதோ தந்தை பெரியார் 1925-இல் காரைக்குடி அரசியல் மாநாட்டில் ஆற்றிய உரையில் சொல்கிறார்,

நம் தேசத்து ஏழைகள், தொழிலாளர்களை எந்த எந்த தேசத்துச் சாமான்கள் பட்டினி போட்டு அவர்களது சுயமரியாதையையும் ஆண்மையையும் கெடுக்கின்றது என்று யோசித்து அந்தச் சாமான்களை விலக்கி நம் சாமான்களே நம்மை ஆளும்படி செய்வது தான் சுயராஜ்யம். இந்த சுயராஜ்யம் சம்பாதிப்பதற்கு முதலாவது நம்மையும் நமது மானத்தையும் ஆண்டு கொண்டிருக்கிறதும் நம் தேசத்திலிருந்து வருடம் ஒன்றுக்கு 60-70 கோடி ரூபாய்க்கு மேலாகக் கொள்ளை கொண்டு நம் நாட்டு ஸ்தீரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் வேலையில்லாமல் செய்வதான அந்நிய நாட்டுத் துணிகளுக்குப் பதிலாக நம் நாட்டு நெசவாளர்களைக் கொண்டு கைத்தறியால் நெய்வித்த துணியை நாம் எல்லோரும் உபயோகிப்பது தான் மகாத்மா அவர்கள் கதர் கதர் என்று சொல்லுவது.

இந்தக் கதர் மாத்திரம் மகாத்மாவின் இஷ்டப்படி நம்மெல்லாராலும் அங்கீகரிக்கப்படுமேயானால் நம் நாட்டின் தாங்க முடியாத வரியென்று சொல்லப்படுகின்ற 150 கோடி ரூபாயில் அரைவாசியாகிய 75 கோடி ரூபாய் நம் நாட்டுக்கு மிகுதியாகிவிடும், அந்நிய சாமான்களால் நம் நாட்டிலிருந்து போகிற பணம் ரசவாதத்தைவிட, அதிக தந்தரமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. 20 கெஜமுள்ள அந்நிய நாட்டு மல் துணியாகிய பீஸை எடைபோட்டுப் பார்த்தோமேயானால் 2½ ராத்தல் கனம் தான் இருக்கும், அதை வண்ணானுக்குப் போட்டுத் துவைத்து அதன் போலிருக்கும் கொழுப்பையும் வெள்ளைக் களிமண்ணையும் நீக்கி எடை போட்டுப் பார்த்தால் இரண்டு ராத்தல் தானிருக்கும், இந்த இரண்டு ராத்தல் எடையுள்ள இருபது கெஜம் துணியை நமக்கு விற்பது 15 ரூபாய்க்கு. இதற்காக அந்நிய நாட்டார் நம்மிடமிருந்து வாங்கிக் கொண்டு போகும் பஞ்சிற்கு நமக்குக் கொடுப்பது இரண்டு ராதல் எடைக்கு 1¼ ரூபாய். இந்த 1¼ ரூபாய்க்கு நம்மிடமிருந்து பஞ்சு வாங்கிக் கொண்டு போய்ச் செய்த துணியை நம்மிடமே 15 ரூபாய்க்கு விற்று 13¼ ரூபாய் லாபம் சம்பாதிக்கிறார்களானால் நம் தேசத்தின் இப்பொழுது உபயோகப் படுத்துகிற இவ்வளவு அந்நிய நாட்டு துணிக்கும் இன்னும் மற்ற மருந்துச் சாமான்களுக்கும் எவ்வளவு பணத்தைக் கொடுத்து நம் தேசம் ஏழையாயப் போய் விடுகிறது?




பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
எல்லாம் வல்ல கடவுளின் கோயிலுக்குப் பூட்டும், காவலும் ஏன்?

அது மாத்திரமல்லாமல் நம் ஏழைத் தொழிலாளிகள் வேலையில்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்? ஆகையால் உண்மையாய் நமக்குச் சுயராஜ்யம் வேண்டுமானால் நம் தேசத்திலிருக்கும் ஏழைகளிடமும் தொழிலாளிகளிடமும் நமக்கு அன்பிருக்குமேயானால் நாம் ஒவ்வொருவரும் கதர் உடுத்த வேண்டியதும் கதர் உற்பத்திக்கு வேண்டிய அனுகூலம் செய்யவும் வேண்டியதும் தான்.

மேற்கூறிய அதே உரையில் தான் சாதி ஒழிப்பின் அடிப்படை குறித்தும், இந்து மத இழிவை சுமக்கும் சூத்திரர்கள் பஞ்சமர்களை ஒதுக்குவது பற்றியும் தந்தை பெரியார் பேசினார். இந்த உரையின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல், சாதி என்பது இந்து மதத்தின் நச்சு அது ஒவ்வொருவர் உள்ளத்தையும் நஞ்சாக்குகிறது என்று சொன்ன அண்ணல் அம்பேத்கர் அவர்களின் ஆய்வை நாம் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த உரையில் தான் இந்த ஏற்றத் தாழ்வுகளைக் கண்டும் கடவுள் என்று ஒருவர் இருப்பாரானால், என்கிற கேள்வியையும் தந்தை பெரியார் எழுப்பினார். அப்பேச்சின் சில பகுதிகளை மட்டும் இங்கு பார்க்கலாம்,

இப்படி நமது நாட்டில் தீண்டாமை, பார்க்காமை, பேசாமை, கிட்ட வராமை ஆகிய இவை ஒருவரையாவது விட்டவை அல்ல. ஒருவர் தனக்குக் கீழ் இருப்பவரை தீண்டாதவர், பார்க்காதவர் என்று சொல்லுவதும் அதே நபர் தனக்கு மேல் உள்ளவருக்கு தான் தீண்டாதவராகவும், பார்க்கக் கூடாதவராகவும் இருப்பது வழக்கமாயிருப்பது மாத்திரம் அல்லாமல் இவர்கள் இத்தனை பேரும் சேர்ந்து நம்மை ஆளுகிற ஜாதியாய் இருக்கிற ஐரோப்பியருக்கு தீண்டாதவராகவும் கிட்ட வரக்கூடாதவராகவும் இன்னும் தாழ்மையாகவும் இருந்து வருவதையும் நாம் காண்கிறோம்.

இந்தக் கொடுமையை நம்மிடம் வைத்துக் கொண்டு வெள்ளையர் கொடுமை என்றும், கென்னியா, தென்னப்பிரிக்காவில் வெள்ளையார் ஜாதி இறுமாப்பு என்றும், நாம் பேசுவது எவ்வளவு முட்டாள்தனமும். பார்ப்பவருக்கு கேலியுமாகும் என்பதைக் கவனிக்க வேண்டும். நம் நாட்டில் பிறந்த நம் சகோதரரை நாம் பார்த்தால் பாவம். கிட்ட வந்தால் பாவம். தொட்டால் பாவம் என்று சொல்லிக் கொண்டு அதற்கு ஆதாரம் காட்டவும், எழுதி வைத்துக் கொண்டிருக்கும் அக்கிரமத்தை விடவா *1818*-வது வருக்ஷத்து ரௌலட் ஆகட்டும் ஆள் தூக்கி சட்டமும் *144. 107. 108* பிரிவு பிரயோகமும் அக்கிரமமானது என்பதை சற்று யோசியுங்கள், நம்மவரை நாமே செய்யும் கொடுமையை விடவா அந்நியக் கொடுமை பெரிது?



இந்த கருத்துக்களை தந்தை பெரியார் தான் நடத்திய மாநாடுகளில் பேசியது மட்டுமன்றி இந்த பேதத்தை நீக்குவதற்காக தன் கல்வி, பட்டம், பதவிகள் அனைத்தையும் பயன்படுத்தி போராடிய அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சாதியை ஒழிக்க வழி என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை மொழி பெயர்க்கச் செய்து தமிழில் வெளியிட வைத்தார். அந்தக் கால கட்டத்தில் மராத்தி மொழியில் கூட அக்கட்டுரையை வெளியிட முடியவில்லை என்பது வரலாற்றுச் செய்தியல்லவா?

பெண்கள் தமிழ் நாட்டில் பெற்றிருக்கும் முன்னேற்றத்தைப் போலவே பட்டியலின மக்கள் நில உரிமை பெறவும், பள்ளிக் கல்வி முதல் பட்டமேற்படிப்பு வரை இலவசமாக கற்கவும், கல்வி உதவித் தொகைகளைப் பெற்று நல்ல பதவிகளை அடையவும், வாய்ப்புகள் உருவானதற்கு தந்தை பெரியாரின் இந்த சிந்தனையும். உழைப்பும் அடிப்படைக் காரணங்கள். அதற்கு அழிக்க முடியாத சாட்சியமாக நிற்பது சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாக தாழ்த்தப்பட்டவர் ஒருவர் கூட நியமிக்கப்பட வில்லையே என்று பொது மேடையில் தந்தை பெரியார் வைத்த வேண்டுகோளும் அதை ஏற்று அன்று முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் மாவட்ட நீதிபதியாக இருந்த திரு.வரதராஜன் அவர்களை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமித்ததும் அவரே இந்திய உச்ச நீதிமன்றத்தில் இடம் பிடித்த முதல் பட்டியல் சாதி நீதிபதி என்ற வரலாறும் தந்தை பெரியாரின் சமத்துவக் கொள்கைக்கு சான்றாக நிற்கிறது.

இப்படி ஒரு தலைவரால் சிந்திக்கவும், போராடவும், சாதிக்கவும் முடியுமா என்று நினைத்துப் பார்த்தால் மேலும் மேலும் வியப்புக்குறிகளே தோன்றுகின்றன. இத்தனையும் செய்து காட்டுவதற்கு ஒருவருக்கு என்ன நோக்கம், இலக்கு இருக்க முடியும்? தன் இனம், தன் சாதி, தன் குடும்பம் என்று தேய்ந்து கொண்டு போகும் மனிதர்கள் ஒரு புறம். என் மொழி, என் இனம், என் மதம் மட்டுமே வாழ வேண்டும், ஆள வேண்டும் என்று வெறியூட்டும் மனிதர்கள் மறுபுறமுமாய் அலைக்கழிக்கப்படும் இந்தச் சமூகத்தில் எனக்கு தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம் எதுவும் கிடையாது, மனிதாபிமானம் மட்டும் தான் உண்டு என்று அறிவித்த அந்த பகுத்தறிவுச் சிந்தனையாளரைத்தான், பற்று அற்றான் என்று கூறுகிறார் போலும் திருவள்ளுவர். பற்றுக பற்றாறின் பற்றினை என்ற அந்தத் திருக்குறள் தந்தை பெரியாரைக் குறிப்பதாகவே விளங்குகிறது. ஆம் அவரைப் போல் பற்றற்றான் வேறு யார்? அவரது பற்றினைப் பற்றுவதே மனிதப் பற்றை வளர்ப்பதற்கான ஒரே பற்றாகும். ●



# கலைஞர் மீது ஏனிந்தக் கோபம்?

ப.திருமாவேலன்
பத்திரிகையாளர்



மரணபடுக்கையில் இருக்கும்போதும் கலைஞரை “சிலரால்” ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர் மரணித்த பிறகும் கலைஞர் மீதான ஆத்திரம் “அவர்களுக்கு” குறையவில்லை. கடற்கரையை நோக்கி அவரது உயிரற்ற உடலோடு, நடை பிணங்களாய் நடந்து போன கூட்டத்தைப் பார்த்து அந்த சிலரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவர் அந்த “சிலருக்கான” தலைவர் இல்லை. அதனால் சினம் கொண்டார்கள். அவர் “பலருக்கான” தலைவர். அதனால் பல லட்சக்கணக்கானோர் பதறிப்போனார்கள். அந்த சிலருக்கு இருப்பது ஆயிரங்காலத்துக் கோபம். இந்தப் பலருக்கும் இருப்பது நூறாண்டுப் பாசம். முன்னது ஆரியம் பின்னது திராவிடம். நரகாசுரனுக்கும் இராவணனுக்கும் இப்படித்தான் கொண்டாடி இருப்பார்கள். நமது உண்மையான திராவிடத் திருவிழாக்களை அடையாளம் காண வேண்டிய அவசியத்தை உணர்த்திவிட்டுப் போயிருக்கிறார் கலைஞர்.

“பாராட்டிப் போற்றி வந்த பழைமை யோகம், ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்” என்ற வரிகளில் தொடங்கிய கலைஞரின் பயணம், “இராமர் கட்டிய பாலம் எங்கே இருக்கிறது?” என்ற கேள்வியால் முடியும் வரை ஈரோடு, அவர் உயிரோடு கலந்திருந்தது “உங்கள் ஆட்சி மூன்றாந்தர ஆட்சியாக இருக்கிறது!” என்று இராஜாஜியின் சீடன் ஹெண்டே குற்றம் சாட்டினார். “இது மூன்றாந்தர ஆட்சி மட்டுமல்ல ! நாலாந்தர ஆட்சி. ஆம் வருணத்தில் நாலாம்படி வகிக்கும் சூத்திரர்களுக்கான ஆட்சி” என்று பெரியாரின் சீடன் கலைஞர் பதில் சொன்னார். பதவி இல்லாத காலத்தில் அல்ல. முதலமைச்சராக இருக்கும்போதே துணிச்சலாக சொன்னார். அதனால் தான்; தான் சாகும்வரை வெறிக் கொண்டு தாக்கினார் “துக்ளக் சோ”. அவரோடு கலைஞர் எதிர்ப்பு செத்துப் போய்விடக் கூடாது என்பதற்காக ஆடிட்டர் குருமூர்த்திக்கு பத்திரிக்கையாளர் பட்டாபிஷேகம் சூட்டி உட்கார வைத்துக் கொண்டது ஆரியம். இவர்களிடம் நல்லபேர் வாங்க வேண்டும் என்று எப்போதும் எண்ணியவர் அல்ல கலைஞர். பெரியாரை கலைஞர் கைவிட்டால் முதலில் பாராட்டு விழா நடத்தும் கூட்டம் இது என்பதும் அவருக்குத் தெரியும். அதற்கு அலையவில்லை. கடைசி வரைக்கும் கலைஞர் காத்த பெருமை அது தான்.!

ஒடுக்கப்பட்ட சமூகத்து மக்களான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஐ.ஏ.எஸ் ஆகலாம், நீதிபதி ஆகலாம். ஆனால் கோவில் அர்ச்சகர் ஆக முடியாது. அரசியலமைப்புச் சட்டத்தைவிட உன்னதமானதாக ஆகமங்கள் நிமிர்ந்து நின்றன. கர்ப்பக்கிரகத்தை கடவுளுக்கும் தனக்குமனதாக மட்டும் பூட்டி, தன்னையும் கதவுக்கு இணையான “சாமி” யாக ஆக்கிக் கொண்ட சமூக அநீதியை சட்டத்தால் உடைத்தது கலைஞரின் பேனா. “அர்ச்சகர் பணிக்கு பயிற்சி பெற்ற அனைவரும் சேரலாம்” என்றது அவரது சட்டம். உச்சநீதிமன்ற ஊறுகாய்ப் பானையில் அதைத் தூக்கிப் போட்டுப் பல ஆண்டுகள் பதுக்கி வைத்திருக்க முடிந்ததே தவிர சட்டம் செல்லாது என்று இந்தக் காலத்தில் சொல்ல முடியவில்லை. “கர்ப்பக்கிரகத்திற்குள் நீங்கள் எப்போது நுழைகிறீர்களோ, அப்போது அவர்கள் வெளியேறி விடுவார்கள்” என்று பெரியார் சொன்னது சில பத்து ஆண்டுகளில் பார்க்கப் போகிறோம். “கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தப் போகிறேன்”, என்று கிளம்பிய பெரியாரைத் தடுத்து, ‘ சட்டம் போடுகிறேன் அய்யா’ என்று கிளம்பிப் போய் விதித்தார் அல்லவா.... கலைஞரின் பெருமை இதில் தான் அடங்கி இருக்கிறது. !

இந்திய வரைபடத்தில் ஒரே எல்லைக்குள் இருந்தாலும் வடநாடு தென்னாடு பிரிவினை அன்றும் உண்டு, இன்றும் உண்டு என்றும் உண்டு. தெற்கின் செழுமையையும் உண்டு கொழுத்தது வடக்கு. இதனை “வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது’ முழக்கமாக்கியது திராவிடர் இயக்கம். தனித் தமிழ்நாடு கேட்டார் பெரியார். திராவிட நாடு பிரிவினையை வலியுறுத்தினார் அண்ணா. தமிழ்நாடும் திராவிடநாடும் பெயர்தான் வேறுபாடே தவிர ஒன்று தான். இந்த முழக்கம் தான் வட இந்தியா எதிர்ப்பு, வடவர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பலியா எதிர்ப்பு, மார்வாடி எதிர்ப்பு, அதிகாரக் குவியல் எதிர்ப்பு, அரசியல் கட்ட எதிர்ப்பு என வளர்ந்து இன்று நீட் எதிர்ப்பு, கூடங்குளம் எதிர்ப்பு, ஸ்டெர்லைட் எதிர்ப்பு, எட்டு வழிச் சாலை எதிர்ப்பாக கனன்று நிற்கிறது. பெரியாரின் உயிர் பிரிவினைக்காகவே பிரிந்தது. “பிரிவினையைக் கைவிட்டாலும் அதற்கான நோக்கங்கள் அப்படியே இருக்கின்றன’ என்ற அண்ணலின் மொழியை, தம்பி கலைஞர் அப்படியே வைத்திருந்தார்.

“மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாச்சி” என்று முழங்கி, அதை நோக்கி பல்வேறு மாநிலக் கட்சிகளை அணிதிரட்ட கலைஞர் முயன்றதால் தான் அவரது ஆட்சி *1976ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. மிசாவை எதிர்த்தால்*


பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் எனில், முதலாளியும், தொழிலாளியும்,பார்ப்பானும் பறையனும் ஏன்?

ஆட்சி கலைக்கப்படும் என்று தெரிந்தே எதிர்த்தார். இந்திய அமைதிப்படை ஈழம் சென்றபோது எதிர்த்தார். அமைதிப்படையை வரவேற்கப் போகமாட்டேன் என்றார். "மிசாவைக் காட்டி மிரட்டினால் தமிழகத்துக்குள் வர விசா வாங்க வேண்டி வரும்" என்றார். இந்த தென்னாட்டு உறுமல் தான் கலைஞரின் பெருமை.!

மொழியைக் கருவியாக பார்த்தவர் பெரியார். ஆனால் அவரது வழித் தோன்றல்களான அண்ணாவும் கலைஞரும் மொழியை உணர்ச்சியாகவே பார்த்தார்கள், மாற்றினார்கள். தமிழ் இலக்கியத்தின் சுவையை உரித்துக் கொடுத்தும், பழந்தமிழ் மன்னர்களின் பெருமையைப் பறை சாற்றியும் இனப் புகழை மீட்டெடுக்க எழுதியும், பேசியும், நினைவுச் சின்னங்களை எழுப்பியும் வந்தவர் கலைஞர். தொல்காப்பியப் பூங்காவும் குரளோவியமும் இலக்கியத்தை புதுப்பித்து. வள்ளுவர் கோட்டமும் பூம்புகாரும் பழந்தமிழ் காலத்துக்கு அழைத்துச் சென்றது. உலகத் தமிழ் மாநாடு நடத்தியும், இலக்கிய பனுவல்களை ஆயிரக்கணக்கில் நாட்டுடமை ஆக்கியும் பழமையை புதுப்பித்துக் கொண்டார் கலைஞர். அந்த காலத்தில் புலவராகவும், அரசராகவும் இருந்தவர்கள் போல கலைஞரும் புலவராகவும், அரசராகவும் இருந்தார். சென்னை மாகாணத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதும் 1938- ல் தொடக்கிய அனைத்து மொழிப் போராட்டங்களை நடத்தியதும் திராவிடர் இயக்கமே. இவை எதுவும் தமிழ் தேசிய குஞ்சு, குருமார்களுக்குத் தெரியாது. சில குணக்கேடர்களின் முன்னும் பின்னும் வெட்டப்பட்ட மேற்கோளையே மேல் புல் மேயும் பதர்கள் அவர்கள். திராவிட இயக்கம் மக்கள் மையப் படுத்திய தமிழை மலினப்படுத்தி வரும் இவர்களின் அப்பன்மாரும், தாத்தாமாரும் தமிழ் படிக்கக் காரணமானது திராவிட இயக்கம். அண்ணாவும் கலைஞரும் ஈராயிரம் ஆண்டுத் தமிழை இருபதாம் நூற்றாண்டின் பாடு பொருளாக்க. அதிகார முகம் ஒன்றும் அவசியமாகிறது. அதுவாக கலைஞர் இருந்தது தான் அவருக்குப் பெருமை.!


தமிழை அவர்கள், " நீஷ பாஷை" என்பார்கள். ! தமிழர்களை "தஷ்யூக்கள்" என்பார்கள்! கருவறைக்குள் போனால், " தீட்டாயிடுத்து" என்பார்கள்! ஈ. வெ. ரா. அவர்களுக்கு " அரக்கன்"! தமிழ்நாடு என்றால் "பிரிவினை வாதி" என்பார்கள்.

இவை அனைத்துக்கும் எதிர்ப்பதும் கலைஞர். அவர்கள் எதிர்ப்பது இதனால் தான் நாம் ஆதரிக்க வேண்டியதும் இதனால் தான். ! ●



# 35 வயதிற்கு பிறகான கர்ப்பம் கவனிக்க வேண்டிய விஷயங்கள்

மருத்துவர்
**இராஜபார்த்திபன் இரவிச்சந்திரன்**



35 வயதிற்கு மேல் திருமணம் செய்து கொள்வது பெண்களின் தனிப்பட்ட, தன்வாழ்வு சார்ந்த உரிமை. எந்த வயதிற்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதெல்லாம் தனிப்பட்டோர் விருப்பம், அதில் நுழைந்து கருத்து சொல்வது நாகரிகமற்றது.

Elderly marriageகளால் சிலருக்கு mental disorders வருமென்றாலும், it's negligible.

ஆனால் 35 வயதிற்கு பிறகான கர்ப்பம் விவாதத்திற்குரியது.

High risk pregnancy என அழைக்கப்படும் அபாயம் மிக்க கர்ப்பங்களுக்குள் இதுதான் முதன்மையானது.

இதைத் தவிர பதின்பருவத்தில் கர்ப்பம் தரித்தல்,

நீரிழிவு நோய் மற்றும் ரத்தக்கொதிப்பு போன்ற co-morbidityகளோடு கர்ப்பம் தரித்தல் போன்றவையும் High risk pregnancyகளுள் அடக்கம்.

High risk pregnancyகளின் பக்கவிளைவுகளாவன

1. chromosomal abnormalities (பிறப்பிலேயே ஊனமுற்ற குழந்தைகள்)
2. குழந்தை இறந்து பிறந்தல்
3. மனநலம் குன்றிய குழந்தை, மூளை வளர்ச்சியற்ற குழந்தை
4. தேதிக்கு முன்பே பிறக்கும் குழந்தைகள், நோய் அபாயங்களுக்கு உட்பட்டவை
5. கர்ப்ப கால நீரிழிவு நோய்
6. கர்ப்ப கால ரத்தக்கொதிப்பு
7. தாய்க்கான இதர co-morbidities

என அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

தாய் சேய் இறப்பு விகிதம், சாதாரண கர்ப்பங்களை விட இதில் 4-20 மடங்குகள் அதிகம்.

இதைத் தவிர முதிர் வயது கர்ப்பிணிகள் சாதாரண கர்ப்பங்களை போல் அல்லாமல் இன்னும் அதிகமான முறை pre-natal visitsகள் வரவேண்டியுள்ளது.

இது போன்ற கர்ப்பங்களின் managementகள் இன்னும் சிரத்தை எடுத்து செய்யவேண்டியுள்ளது.

இந்தியாவின் மருத்துவ கட்டமைப்பிலும், patient loadல் இப்படியான கர்ப்பங்கள் மருத்துவருக்கும், கர்ப்பிணிக்கும் அதிக அலைச்சல் மற்றும் நேரம் எடுப்பவை. இதை தவிர இது போன்ற கர்ப்பங்களை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெரும்பாலும் எடுத்துக்கொள்வதில்லை.

Tertiary health centreகளுக்கே refer செய்கிறார்கள்.

இந்தியாவில் மருத்துவர்கள் இன்னும் limited resourcesகள் தான், அரசு மருத்துவர்கள் மற்றும் இந்திய சமூகத்தின் நன்மை கருதி இது போன்ற கர்ப்பங்களுக்கு முன்னால் ஆலோசித்து முடிவு எடுப்பது நல்லது.

தன்னுடைய சொந்த முடிவுகள் சமூகத்திற்கு பாரமாய் இல்லாதவாறு இருத்தல் வேண்டும். ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
பத்து அவதாரங்கள் எடுத்த கடவுள்,
விலைவாசியைக் குறைக்க ஓர் அவதாரம் எடுக்காதது ஏன்?

அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தவுடன் விடுதலையில் தலையங்கமாகவும், மறுநாள் வானொலியில் உரையாகவும், தந்தை பெரியார் அவர்கள் அண்ணாவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள சில வரிகள் இவை:-

***"தான் இந்த (என்னுடைய) மந்திரி சபையையே பெரியாருக்குக் காணிக்கையாக வைத்துவிட்டேன் என்று கூறி இருக்கிறார். அப்படி என்றால், பெரியார் கொள்கைப்படி நான் நடப்பேன் என்று சொன்னதாக நான் கருதுகிறேன்.***

***அதற்கேற்ப அவர் செய்த அரும்பெரும் காரியங்களில் முக்கியமானது சுயமரியாதைத் திருமணச் செல்லுபடித் திட்டம் ஆகும். அதில் கடவுளுக்கோ, மதத்திற்கோ, சாத்திரத்திற்கோ இடமில்லை என்பதாகும். இது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல், உலகத்திற்கே மாபெரும் துணிச்சலான காரியம் என்று கருதப்பட்டது.***

***அண்ணாவின் குணம் மிக மிகத் தாட்சண்ய சுபாவமுடையது என்றுதான் சொல்ல வேண்டும். யாரையும் கடிந்து பேச மாட்டார்.***

***நான் தி.மு.கவிற்கு அது தேர்தலில் வெற்றி பெறும் வரை படு எதிரியாக இருந்தவன். தேர்தலுக்குப் பிறகு அண்ணா என் எதிர்ப்பை மறந்து, அடியோடு மறந்து, மிக்கப் பெருந்தன்மையோடு நட்புக் கொள்ள ஆசைப்பட்டு, என்னை அவர் பிரிவதற்கு முன் இருந்த மரியாதையுடன் நண்பராகவே நடத்தினார்."***

அறிஞர் அண்ணாவின் கொள்கை மற்றும் நடைமுறை ஆகியவற்றை ஒருசேரப் புரிந்துகொள்ள மேற்காணும் வரிகள் உதவும்.

அண்ணா பெரியாரைப் போல இல்லை. திராவிட இயக்கக் கொள்கை சற்று நீர்த்துப் போனதற்கு அவரே காரணம் என்று இன்றும் நம்புகிறவர்கள், சொல்கிறவர்கள் உண்டு. அதற்குச் சில சான்றுகளையும் அவர்கள் சொல்ல முயற்சி செய்வார்கள்.

கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்றார் பெரியார். ஆனால் அண்ணாவோ ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறி அதனைத் தளர்த்தி விட்டார். தேர்தலில் ஒருநாளும் பெரியார் போட்டியிட்டதில்லை. அண்ணாவோ தேர்தல் பாதைக்குச் சென்று விட்டார். பெரியாரின் எழுத்திலும், பேச்சிலும் தமிழரின் தொன்மை, பெருமை, தமிழ்மொழியின் சிறப்பு ஆகியனவற்றுக்கெல்லாம் இடமிருக்காது. அண்ணாவோ அத்தகைய பழம் பெருமிதங்களை மக்களிடம் ஊட்டி வளர்த்தார்.

- இவைதான் அண்ணா குறித்த விமர்சனங்கள்.



# பெரியார் தங்கம்

# அண்ணா நகை



அவனன்றி ஓரணுவும் அசையாது எனில்,
கோவில் சிலை கடத்தப்பட்டு வெளிநாடு செல்வது எவன் செயல்?

**அண்ணா மென்மையான இயல்பு உடையவர். தங்கள் கருத்துகளை மென்மையாகவும், மக்களுக்கு இணக்கமாகவும் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர் கருதினார். அப்படிக் கொண்டு சென்ற கருத்துகள் அனைத்தும் திராவிட இயக்க கருத்துகளே. இன , மொழி உணர்வு, சமூக நீதி, பகுத்தறிவு ஆகிய கருத்துகளைத் தமக்கே உரிய வகையில் அவர் மக்களிடம் கொண்டு சென்றார். வெற்றியும் கண்டார்.**

இந்த விமர்சனங்களை முற்றிலும் பொய்யென்று கூறி நாம் மறுதலித்துவிட முடியாது. இவற்றுள் உண்மைகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் இந்த உண்மைகளுக்குள் இருக்கும் நுண்ணரசியலை நாம் கவனிக்கத் தவறி விட்டால், அண்ணா நமக்கு அந்நியமாகத்தான் தெரிவார்.

நாம் அண்ணாவைப் புரிந்து கொள்கிறோமோ இல்லையோ, பெரியார் மிகச் சரியாக அவரைப் புரிந்து கொண்டுதான், அவர் இறந்தவுடன் தன் கருத்துகளை மேலே உள்ளவாறு கவனமாக முன்வைக்கிறார்.

திமுக ஆத்திகத்தின் பக்கம் திரும்பி விட்டது என்று இன்றைய வார ஏடு ஒன்று தலையங்கம் எழுதியிருப்பதைப் போலவே, அன்றைக்கும். கடற்கரையில் நடைபெற்ற அண்ணா நினைவேந்தல் கூட்டத்தில் ராஜாஜி அவர்களும் தன் கருத்தை வெளியிட்டார். ஆனால் அந்த மேடையிலேயே அதனைப் பெரியார் மறுத்துவிட்டார். அண்ணாதுரை எப்போதும் என் கொள்கைகளில் நின்ற என் பிள்ளைதான் என்றார் பெரியார்.

கடவுள், தேர்தல், மொழி குறித்த அண்ணாவின் கருத்துகள் அனைத்தும் ஒன்றோடொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை. ஏற்றத்தாழ்வு மிகுந்த நம் சமூகம் குறித்துப் பெரியார், அண்ணா இருவருக்கும் ஒருமித்த கவலை இருந்தது. எனினும் அணுகுமுறையில் வேறுபாடும் இருந்தது.

சமூக மேம்பாட்டிற்காகவே தன் கருத்துகளைப் பெரியார் எடுத்துவைத்தார். ஆனால் அந்தக் கருத்துகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் அதற்கு ஆட்சி அதிகாரம் வேண்டும் என்பதை அண்ணா பெரியாரோடு இருக்கும்போதே உணர்ந்தார். 1948ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற மாநாட்டில் அண்ணா ஆற்றிய உரையைக் கவனித்துப் படித்துப் பார்த்தால் இது உண்மை என்பது புரியும். அப்போதே அவர் அந்த உரையில் தன் கருத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.



அந்த நோக்கில்தான், தி.மு.கழகம் தொடங்கி 7 ஆண்டுகளுக்குப் பிறகு, கட்சித் தொண்டர்களின் கருத்தை வாக்கெடுப்பின் மூலம் அறிந்து, தேர்தலில் போட்டியிடுகின்றார். ஒருவனே தேவன் என்னும் திருமூலரின் கோட்பாடு மக்களை அணுகுவதற்குத் தேவையாகின்றது. எனினும் தேர்தலில் வெற்றிபெற்று 1967இல் ஆட்சிக்கு வந்த பின்னர், அண்ணா என்ன செய்தார்? அரசு அலுவலகங்களில் உள்ள கடவுள் படம் எல்லாவற்றையும் அகற்ற வேண்டும் என்று அரசு ஆணை வெளியிட்டார். இதனை விடப் பெரியார் கொள்கைக்கு ஆதரவாக வேறு என்ன செய்ய முடியும்!

ராஜாஜி அவர்களுடன் கூட்டணி வைத்துக்கொண்டுதான் தேர்தலில் வெற்றி பெற்றார். ஆனால் முதல்வராகப் பதவி ஏற்பதற்கு முன்னர், திருச்சி சென்று, இந்த ஆட்சியே உங்களுக்குக் காணிக்கை என்று பெரியாரிடம் சொன்னார். சொன்னபடி நடக்கவும் செய்தார்.

தமிழ் மொழிப் பெருமை பேசினார் என்பது உண்மைதான். ஆனால் எந்த இடத்திலும், தமிழில் உள்ள புராண, மூட நம்பிக்கைக் கருத்துகளுக்கு அவர் உரம் சேர்க்கவில்லை. மொழி உணர்ச்சியையும், இன உணர்வையும் மக்களிடம் ஊட்டியதன் மூலம், நாம் ஆரியத்தின் அடிமைகள் இல்லை, தன்மானம் மிக்க தனி இனம் என்பதை மக்களிடம் எடுத்துச் சொன்னார்.

பெரியார் சொல்லியிருப்பதை போல, அண்ணா மென்மையான இயல்பு உடையவர். தங்கள் கருத்துகளை மென்மையாகவும், மக்களுக்கு இணக்கமாகவும் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர் கருதினார். அப்படிக் கொண்டு சென்ற கருத்துகள் அனைத்தும் திராவிட இயக்க கருத்துகளே. இன , மொழி உணர்வு, சமூக நீதி, பகுத்தறிவு ஆகிய கருத்துகளைத் தமக்கே உரிய வகையில் அவர் மக்களிடம் கொண்டு சென்றார். வெற்றியும் கண்டார்.

பெரியாரின் கொள்கைகளை அண்ணா நீர்த்துப் போகச் செய்துவிட்டார் என்பது தவறான புரிதல். பெரியாரின் கொள்கைகளை வெகு மக்களிடம் கொண்டு செல்ல சில உத்திகளை அவர் கையாண்டார் என்பதே சரியான பார்வை.

நான் ஒரு கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டேன். பெரியார்தான் 24 காரட் தங்கம். அண்ணா, 22 காரட்தான். ஆனால் 22 காரட் தங்கத்தில்தானே நகை செய்ய முடியும். பெரியார் தங்கம். அண்ணா நகை!

பெரியார் இல்லாமல் அண்ணா இல்லை. அண்ணா இல்லாமலும் பெரியார் இல்லை. ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
அன்பே உருவான கடவுளுக்குக் கொலைக் கருவிகள் எதற்கு?



# எது சுதந்திரம்?

சுதந்திர மென்றால் என்ன? உண்மையில் நாம் சுதந்திரம் பெற்று விட்டோமா? நாம் சுதந்திரமாகத்தான் இந்த நாட்டில் இருக்கின்றோமா? இதை அனைவராலும் உணர முடிகிறதா? ஆகஸ்ட் 15-ல் ஒவ்வொரு ஆண்டும் ஆங்கிலேயரின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்றதாக கொண்டாடுகிறோம். ஆங்கிலேயன் வந்தப் பிறகுதான் நாம் அடிமையானோமா? அதற்கு முன் நாம் அனைவரும் முழு சுதந்திரமாக, அதுவும் இந்தியர்களாக ஒற்றுமையாக வாழ்ந்தோமா? ஆங்கிலேயன் வருவதற்கு முன்பு ஆட்சி செய்த பல்வேறு மன்னர்களும் ஆரியர்களின் சூழ்ச்சியில் சிக்கி சுயத்தையிழந்து ஆரியர்களின் சிந்தனைக்கு அடிமைகளான மன்னர்கள், ஆரியர்களின் சொல்படி, மனுதர்மப்படி ஆட்சி செய்ததின் விளைவு, நாட்டில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அடிமைகளாகவே வாழ்ந்தனர் கையில் விலங்கிட்டு சிறையில் அல்ல. சிந்தனைக்கு விலங்கிட்டதால் நாட்டிலும், வீட்டிலும்.

நாம் அடிமைப்பட்டுத்தான் இருந்தோம். இன்றும் அவ்வாறே உள்ளோம். இதில் எங்கிருந்து வந்தது புதியதாக சுதந்திரம்? இதில் விடுதலை பெற்று இன்று 72வது சுதந்திரதினம் கொண்டாடி முடித்துவிட்டோம். உலகிலுள்ள மக்கள் எப்போது யாரிடம் அடிமைபட்டார்கள், பிறகு அதிலிருந்து விடுதலைப் பெற்றார்கள் என்பதைவிட, குறிப்பாக நாம் இன்று இந்தியர்கள் இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளும் மக்கள் அனைவரும் அடிமைப்பட்டது ஆங்கிலேயரிடமல்ல.

ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து கைபர் கணவாய் வழியாக இன்று இந்தியாவாக உள்ள நிலப்பரப்பிற்கு வந்து பார்ப்பனீயம் தழைத் தோங்கிய பிறகு இந்த நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் எல்லோரும் தங்களுக்குள் எந்தவிதமானதொரு வேறுபாடுகளுமின்றி, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற இழிவுகளின்றி எல்லோரும் சமமாக, ஒற்றுமையாக, ஒன்றாக வாழ்வதைக் கண்ட வந்தேறிக்கூட்டம் தங்களது பரம்பரைக்குணமான சூழ்ச்சி, நயவஞ்சகத்தால், நம் மக்களிடையே உயர்ந்தசாதி, தாழ்ந்தசாதி, என்ற இழிவான எண்ணங்களை நம் மக்களின் சிந்தனையில் புகுத்தி இதற்கு அடிப்படை இந்துமதம், மற்றும் இந்துமதக் கடவுள்கள். இதற்கெல்லாம் மூலம் மனுதர்மம் இதில் கூறியபடி வாழ்வதுதான் மனிதவாழ்க்கைக்கு நல்லது. இவைகளை அறிந்து கொள்ள புராணம் இதிகாசம் உள்ளது. அதில் கூறியதுபோல் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் தங்களது வாழ்வு நலமும், வளமும் பெறுமென்று சொல்லி, அன்று, அந்த அயோக்கியர்கள், ஆரியர்கள் செய்த செயல்தான் இன்று நாம் வாழும் அத்தனை இழிவுக்கும், கேவலத்திற்கும் காரணம். இந்த ஆரிய அயோக்கியர்களின் சூழ்ச்சியில் சிக்கி மதியிழந்த மன்னர்கள் அவர்கள் சொல்படி நடந்ததால்



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்


குழந்தைகளைப் படைப்பது கடவுள் சக்தி என்றால், "குடும்பக் கட்டுப்பாடு" செய்தபின் அவனால் படைக்க முடியுமா?

தோழர் **கா.தமிழரசன்**

**நாடு சுதந்திரமடைந்த நாள் முதல் இன்றுவரை நம்மை ஆளும் ஆட்சியாளர்களால் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்களா? உண்மையில் நாம் சுதந்திரமடைந்திருந்தால் நமது சிக்கல்கள் அனைத்தும் தீர்ந்து விட்டிருக்கவேண்டும், உண்மையில் இன்றுவரை ஒவ்வொரு நாளும் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தங்களின் உரிமைக்காக, அன்றாட தேவைக்காக அரசை எதிர்த்துப் போராடிக் கொண்டே இருக்கின்றார்கள் இதுவா சுதந்திரம்?**

மக்களும் நாளுக்கு நாள் சிறிது சிறிதாய் ஆரியர்களின் சிந்தனைக்கு அடிமையாகி பிறகு ஆரியர்களின் சிந்தனைக்கு முழுமையாக அடிமையானோம். அந்த அறியாமையில், முழு அடிமைத்தனத்திலிருந்து சற்றே விடுபட்டது ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு, இந்த நிலப்பரப்பிற்கு வந்த பிறகுதான்.


சமூகநீதிப் போராளியான மகாராட்டிரத்தைச் சேர்ந்தமூத்த பொதுவுடைமை வாதியான அன்னா பாபு சாட்டே என்று அழைக்கப்பட்ட துக்காராம் பாபுராவ் சாட்டே இந்தியா சுதந்திரம் அடைந்த மறுநாள் ஆகஸ்ட் 16-ஆம் தேதி, மும்பை ஆசாத் மைதானத்தில் லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் இது நமக்கான சுதந்திரமல்ல, இது ஒரு பொய்யான சுதந்திரம், ஒரு ஆண்ட வர்க்கத்தினர், மற்றொரு ஆண்ட வர்க்கத்தினரின் கைகளில் நம்முடைய எதிர்காலத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டனர். நம்முடைய போராட்டம் இன்றும் முடிவடையவில்லை என்று கூறினார். இதைத்தான் தந்தை பெரியாரும் இன்றைய தினத்தை சுதந்திர தினமாகக் கொண்டாடாமல் இது துக்க நாள் என்று கூறினார்.



தந்தை பெரியார்



அம்பேத்கர்



ஜோதிராவ் புலே,

நாடு சுதந்திரமடைந்த நாள் முதல் இன்றுவரை நம்மை ஆளும் ஆட்சியாளர்களால் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களா? உண்மையில் நாம் சுதந்திரமடைந்திருந்தால் நமது சிக்கல்கள் அனைத்தும் தீர்ந்து விட்டிருக்கவேண்டும், உண்மையில் இன்றுவரை ஒவ்வொரு நாளும் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தங்களின் உரிமைக்காக, அன்றாட தேவைக்காக அரசை எதிர்த்துப் போராடிக் கொண்டே இருக்கின்றார்கள் இதுவா சுதந்திரம்? ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரால், வருணத்தினரால் வஞ்சிக்கப்பட்டுள்ளோம். தினம் தினம் வஞ்சிக்கப்படுகிறோம். அப்படியென்றால்,



நாம் இன்றளவும் அடிமைப்பட்டுக் கொண்டு இருக்கிறோம் என்றுதானே பொருள்.

தந்தை பெரியார், அம்பேத்கர், ஜோதிராவ் புலே போன்றோர் சமூகநீதிகாக்க போராடிய, சமூகநீதிகாத்த தலைவர்கள் நமக்கு வலியுறுத்தியது என்ன? உண்மையான சுதந்திரம் என்பது அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவது. ஆங்கிலேயன் இருக்கும்போது இருந்த அடிமைத்தனம், அவன் சென்ற பிறகு இன்னும் கூடுதலானது எப்படி?உண்மையில் நாடு சுதந்திரம் பெற்றது உண்மையாக இருந்தால் நாடு சுதந்திரமடைந்து 72 ஆண்டுகள் ஆகியும் நாம் ஏன் இன்னும் சமூக நீதியைப் பெற அன்றாடம் போராட வேண்டியிருக்கிறது?உண்மையில் அடிமைத்தனம் என்பது ஆங்கிலேயன் வந்த பிறகு துவங்கியதா? என்பதை யோசித்துப் பார்ப்போம்.

வரலாற்றைப் நன்கு படித்துப் பார்த்தால் தெரியும். இந்தியாவில் அம்பேத்கர் கொண்டுவந்த அரசமைப்புச் சட்டத்தை ரத்துசெய்துவிட்டு மனு தர்மத்தையும், பகவத் கீதையையும் அரசமைப்புச் சட்டமாக கொண்டுவரவேண்டும் என்று தலைநகர் டில்லியில் ஆளும் பாஜக அமைச்சர்கள் முன்னிலையில் ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் தொடர்ந்து பேசிவருகின்றனர். வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த (2015-ஆம் ஆண்டு) சுஸ்மா சுவராஜ், பகவத் கீதையை தேசிய நூலாக அறிவிக்கவேண்டும் என்று கூறினார்.

அதே மேடையில் இன்று மாநிலங்களவை உறுப்பினராக உள்ள ராகேஷ் சின்கா என்ற ஆர்.எஸ்.எஸ் காரர் தேசிய நூலாக மட்டுமல்ல, இந்திய அரசமைப்புச் சட்டமாகவே கொண்டுவர வேண்டும், அதற்கு முழுமையான பலம் கொண்ட மோடி தலைமையிலான அரசு தீர்மானம் இயற்றவேண்டும் என்று கூறினார். சுதந்திரம் என்பது இன்றளவும் நடுத்தர வர்க்கத்தினருக்குக் கூட கிட்டாத நிலையில் கீழ்மட்ட மக்களுக்கு அது ஒரு கனவுதான். 2000 ஆண்டுகளாக அடிமைப்படுத்தி வைத்திருந்தவர்களிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு, ஆங்கிலேயர்கள் சென்று விட்டார்கள். சமூகநீதிகாத்த தலைவர்கள் அனைவரும் ஒரே குரலில் இதைத்தானே கூறினார்கள்.


அம்பேத்கர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஒன்றை முக்கியமாக முன்னெடுத்துச் சென்றார் சமத்துவம், சகோதரத்துவம், தீண்டாமை ஒழிப்பு, சமூக நீதி, ஒரு அடிமைக்கு, அவன் அடிமை என்று உணரவைத்துவிடுங்கள் பிறகு அவன் தனக்காக போராடுவான் என்றார்.



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
அணுவில் இருக்கும் ஆண்டவன், அணுகுண்டில் இல்லையா?

நாகை பாலு

# கலைஞருக்கு மரணமில்லை






கலைகளுக்கு மரணமில்லை! எனவே
கலைஞர் என்றும் சாவதில்லை
இருக்கின்றார் இருப்பார்
இளங்கோவும் வள்ளுவன் போல்!
காவியம் உள்ளவரை கம்பனுக்குக் சாவுண்டா...?
கவிமன்னன் பாரதியின்
நினைவுக்கு மரணமுண்டா...?
பட்டுக் கோட்டைகுரல்
பகலிரவாய் ஒலிக்கிறதே.
கலைகளுக்கு மரணமில்லை எனவே
கலைஞர் இனி சாவதில்லை.
எழுதிக் குவித்ததெல்லாம்
எவரெஸ்டாய் நிற்கிறது.
எழுத்தெல்லாம் பனிமலையாய்
ஒளிவீசிச் சிரிக்கிறது.
எழுகத் திரியில் பனி உருகி
எப்போதும் பெருக்கெடுக்கும்
பெருக்கெடுக்கும் நீரெல்லாம்
அவனெழுத்தாய் நடந்திருக்கும்.!
கண்ணீரை விழுங்குங்கள்
கலைஞருக்கு மரணமில்லை
பேசித்தீர்த்தவையும்
பேனாவில் கசிந்தவையும்
மலை போல் குவிந்திருக்க
மரணமென்ப தவர்க்கேது?

எமனுக்கும் அவருக்கும் இரண்டாண்டாய்
போராட்டம்
பாசக்கயிர் நைந்து
பல நாட்கள் திண்டாட்டம்...!
தோற்று நின்ற எமன் கேட்டான்...
"தோள்வற்றித் துவள்கிறதே
துவண்டகை கழன்றிடுமோ
ஏன் வாட்டி வதைக்கின்றாய்
என் பணியை முடிக்கவிடு
காலத்தின் கட்டளையால்
கையேந்தி நிற்கின்றேன்
கருணைப் பெருநிதியே
கையற்றுக் கெஞ்சுகிறேன்.

நீ நினைத்தால் அல்லாது
பணிமுடிக்க முடியாது !
பணிமுடிக்க வில்லையென்றால்
விதியென்னை விட்டிடுமா?
கருணாநிதியே
கலைமா மணியே
திருக்குவளை தொட்டு
செங்கோட்டை மட்டும்
உனைவென்றார் உண்டா !
ஒரு தோல்வி உனக்குண்டா!
ஜானகி
ராமசச்ந்திரன்
ஜெயலலிதா என்று
உன்னிடத்தில் அமர்ந்தவர்கள்
ஒரு சிலர் உண்டு..
அவர்களும் கூட
உன்னை வென்றவர்கள் அல்ல
உனது தொண்டர்கள்.!
ஓய்வறியா உழைப்புக்கு
ஓரளவு ஓய்வளிக்க
மொத்தத் தமிழகமும்
முடிவெடுத்த காரணத்தால்
அவர்களுக்குப் பொறுப்பு
உனக்கந்த விடுப்பு.
கட்டாய ஓய்வுகளும்
காவியம் செய்யவும் குறள்
ஓவியம் செதுக்கவும்
தமிழன்னை செய்த
தந்திரமன்றோ. !
தலைசாயும் கணம் வரை தமிழ்
அன்னைக்கும் மண்ணுக்கும்
தலைமகன் நீயன்றோ ?- உன்னை
இன்னும் கசக்க
இதயமில்லா காரணத்தால் தான்
அன்னை
உன்னை
அவள்மடியில் அமர்த்திக் கொண்டாள்.
" தொண்ணுற்றைந்து
ஆண்டுகளுக்குப் பின்னும்
என்பிள்ளை உழைக்கவோ
என் மனம் துடிக்கவோ" என்று
அன்னை தமிழன்னை
அவள்மடியில் கிடத்திக் கொண்டாள்.
அழவேண்டாம் தமிழினமே
அவனுக்கு மரணமில்லை. !
கல்லக்குடி தொட்டு
கல்லறை உரிமை வரை
இருந்தும் மறைந்துமவன்
ஈட்டிய வெற்றியெல்லாம்
புரட்சிக்கு வழிகாட்டி
பொன்னுலகின் திசைகாட்டி.



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
ஆண்டவன் உண்பதற்கு உணவு படைக்கின்றாயே,
அது மலம்கழிக்காதா?





மற்றவர்களிடம் பழகும் விதத்தையும்
ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக
ஒருவன் கற்றுக் கொண்டானானால் அவனே
வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

- தந்தை பெரியார்

**செப்டம்பர் 01-இல் பிறந்தநாள்**
**காணும் அன்பு மகள்**
**வீ.கயல்விழி அவர்களை**
**வாழ்த்தி மகிழ்கிறோம்!**

வாழ்த்தி மகிழும்

**வீரவேல்**
**தமிழேந்தி**
**வெற்றிமாறன்**





## திருவள்ளுவர் பொத்தக இல்லம்

படிக்க • பாதுகாக்க • பரிசளிக்க

**தகடூர் நகரின்**
**தனிச்சிறப்பான**
**பொத்தக அங்காடி**

**உயரிய நோக்கங்கள்**
**கொண்ட புத்தகங்கள்**
**ஒரே இடத்தில்**

தலைசிறந்த பதிப்பகங்களின் தமிழ் மற்றும் ஆங்கில பொத்தகங்கள் அனைத்தும் கிடைக்கும்.

பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு தேவையான Reference பொத்தகங்கள் அனைத்தும் கிடைக்கும்.

தன்னம்பிக்கை, வாழ்க்கை வரலாறு, வணிகம், மருத்துவம், இலக்கியம், கவிதை, ஆன்மிகம், ஜோதிடம், கதை, கட்டுரை, வரலாறு, நாவல்கள், பொதுஅறிவு, அகராதி, காப்பியங்கள் ஆகிய தலைப்புகளின் பொத்தகங்கள் கிடைக்கும்.

விகடன் பிரசுரம் மற்றும் கிழக்கு பதிப்பகம் வெளியிட்டுள்ள அனைத்து பொத்தகங்களும் கிடைக்கும்.


பொத்தகங்களை வாட்ஸ்அப் வழியாகவும் ஆர்டர் செய்யலாம் வாட்ஸ்அப் எண் 93602 24172.

**திருவள்ளுவர் பொத்தக இல்லம்**

51/25A, Dr.L.S.N. வணிக வளாகம், ஆறுமுகம் ஆசாரி தெரு, தருமபுரி - 636 701

93602 24172 thiruvalluvarbooks@hotmail.com

தந்தை பெரியார் 140வது பிறந்தநாள் வாழ்த்துகள்



Jora Life Care



ஒய்வும் சலிப்பும் தற்கொலைக்கு சமம்.
- தந்தை பெரியார்

ச.செல்வகுமார்
நிறுவனர் மற்றும் தலைவர்

எமது தயாரிப்புகள்




Special for
- இருதய நோய் • புற்றுநோய் • உடல்பருமன்
- கண்நோய் • எய்ட்ஸ் • தோல் நோய்கள்
- இரத்த குறைபாடுகள் • முடி உதிர்தல்
- இளமையான தோற்றத்திற்கு
- பக்கவாதம் ஆகிய அனைத்து விதமான நோய்களிலிருந்து விடுதலை பெறலாம்

இயற்கை வாழ்வியல் முறை மற்றும் உணவு பழக்க வழக்கங்கள் மூலமாக அனைத்து விதமான நோய்களுக்கும் நிரந்தர தீர்வு

புத்துணர்ச்சி பெறும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பொருந்தும்

**எங்களது தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்ய**
**மாவட்ட வாரியாக முகவர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தேவை!**

அலுவலகத்தில் பணிபுரிய அலுவலக ஊழியர்கள் தேவை!
தகுதியின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்
கல்வி தகுதி: 10 முதல் அனைத்து டிகிரி. சம்பள அளவு: 10000 முதல் 30000 வரை

மேலும் விபரங்களுக்கு

**JORA LIFECARE LLP MUMBAI**

4th Floor of 'Chandreshwar Bhavan' 178, Road: Laxmibai Kelkar Marg,,
Location: Sion Hospital, near videophone gallery Sion, Mumbai - 400022

**022 24010280 9321220209 Call:9930720123**









பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள் ▶ பொது நன்மைக்காக கடவுளிடம் வரம் கேட்கும் பக்தன் யாரையாவது காட்ட முடியுமா?

ஏப்ரல் மாதம் இடம்பெற்ற வடலூர் துரை. சந்திரசேகரன் அவர்களின் நேர்காணல் தொடர்ச்சி...

# “கொள்கை வாழ்வில் முழு வெற்றி”

**மாணவர் பருவம் தொட்டு தந்தை பெரியார், அன்னை மணியம்மையார், தமிழர் தலைவர் ஆசிரியரை நேரில் பார்த்தும் பேசியும் அவர்களின் கட்டளைகளுக்கு ஏற்ப கழகப் பணியாற்றியும் வருகிறீர்கள்; செப்டம்பர் 01-ல் 65வது பிறந்தநாள் கொண்டாட இருக்கிறீர்கள், உங்கள் பிறப்பு முதல் இன்றுவரை தாங்கள் கடந்துவந்த களங்கள் பற்றியும் குடும்ப சூழ்நிலை பற்றியும் பதிவு செய்யுங்களேன்..!**

**பிறப்பு :** *1.9.1954*

**ஊர் :** *குறிஞ்சிப்பாடி, கடலூர் மாவட்டம் (பழைய தென்னார்க்காடு மாவட்டம்)*

**வசிப்பிடம் :** *வடலூர் (கடலூர் மாவட்டம்)*

**கல்வித் தகுதி:**

- *எம்.ஏ (வரலாறு)-அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
- *பி.எட் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
- *எம்.எட் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
- *பி.எல் - டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை*
- *பி.எச்டி - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.*



திராவிடர் கழக பொதுச்செயலாளர்
**வடலூர் துரை.சந்திரசேகரன்** அவர்களுக்கு
பிறந்தநாள் வாழ்த்துகள் (01.09.1954)

**பணி செய்த வாய்ப்பு:**

- *குறிஞ்சிப்பாடி வட்டாரம்-பொன்வெலி கிராமத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக 21 ஆண்டுகள்.*
- *இயக்கப்பணி நிமித்தம் 8 ஆண்டுகள் பணிக்காலம் இருந்தபோதே விருப்ப ஓய்வு பெற்றவர்.*
- *ஆசிரியர் போராட்டத்தில் கலந்து கொண்டு வேலூர் சிறையில் 15 நாட்கள்.*

**இயக்கப்பணி:**

- *இயக்கத்தில் இணைந்த ஆண்டு 1971-72 கலைஞர் மாணவர் சீரணி பணி-கடலூரில் பெரியார் சிலை திறப்பு -1973 லிருந்து தீவிரம்.*
- *வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து திராவிட இளைஞர் இன எழுச்சி மாநாடு கடலூரில் நடத்தி ஆசிரியருக்கு எடைக்கு எடை இருமடங்கு நாணயம் வழங்கிய நிகழ்வு.*
- *கடலூர் அரசு பெரியார் கலை-அறிவியல் கல்லூரியில் புதுமுக வகுப்பு, இளங்கலை பட்டப்படிப்பு படித்தபோது புதியவரவுகளின் (மாணவர்கள்-இளைஞர்கள்) கேந்திரமாக தென்னார்க்காடு மாவட்டத்தில் உழைத்தது.*
- *பல மாநாடுகள் சிறக்க உழைத்தது.*
- *பல போராட்டங்கள் பொறுப்பேற்று நடத்தியது.*

**மறக்கமுடியாத நிகழ்வுகள்:**

- *தந்தை பெரியார் நடத்திய இன இழிவு ஒழிப்பு மாநாட்டில் பங்கு பெற்றது (சென்னை இருநாட்கள்)*
- *தந்தை பெரியார் மறைவையொட்டி இறுதி ஊர்வலத்தில் பங்கு பெற்றது.*
- *அன்னை மணியம்மையார் நடத்திய அஞ்சலகங்கள் முன் அறப்போர் மறியல் குறிஞ்சிப்பாடியில் நான் பங்கேற்று நடத்திய முதல் போராட்டம்.*
- *அன்னை மணியம்மையார் நடத்திய திருச்சி பெரியார் மாளிகையில் திராவிட மாணவர் பயிற்சி முகாமில் பங்கேற்றது.*
- *மாணவ பேச்சாளனாக தலைமைக் கழகத்தில் பிற மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப் பெற்றது.*



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
சக்தியுள்ள கடவுளாக இருந்தால், நற்கருத்துகளை மனிதனுடைய அறிவிலேயே புகுத்தி இருக்கலாமே? மத நூல்கள் எதற்கு?

## நேர்காணல் மு.சி.அறிவழகன்

- மாணவனாக தமிழ்த்தலைவர் ஆசிரியருடன் பல நிகழ்வுகளில் பங்கேற்றது.

**இயக்கப் போராட்டங்கள்:** கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களிலும் பங்கேற்று சென்னை, கடலூர், வேலூர் மத்தியச்சிறையில் 9 முறை இருந்த சூழல். டெல்லியில் மண்டலக்குழு அறிக்கை அமுல்படுத்திடக் கோரியும், செயவர்த்தனேவுக்கு கருப்புக் கோடி காட்டும் போராட்டத்திலும் கலந்து கொண்டு கைதானது.

**இயக்கப் பொறுப்புகள்:**

- கடலூர் கல்லூரி மாணவர் கழகச் செயலாளர்
- மாவட்ட திராவிட மாணவர் கழகத் துணை அமைப்பாளர்
- மண்டலக் கழக மாணவரணி, இளைஞரணிச் செயலாளர்
- மாநில கழக மாணவரணிச் செயலாளர்
- மாநில கழக இளைஞரணிச் செயலாளர்
- மாவட்ட திராவிடர் கழகச் செயலாளர், தலைவர்
- மாநில மாணவரணி-இளைஞரணி ஒருங்கிணைப்பு அமைப்புச் செயலாளர்.
- கழக பிரச்சார செயலாளர்களில் ஒருவர்
- கழக துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவர்.
- கழக பொதுச் செயலாளர்களில் ஒருவர்.
- இயக்கப் பிரச்சாரத்துக்காக இருமுறை அந்தமான், மலேசியா, சிங்கப்பூர் சென்று பிரச்சாரத்தில் பல நாட்கள் ஈடுபட்டது.
- வட அமெரிக்காவில் தந்தை பெரியார் கொள்கை பரப்பிடும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றது.
- 1600க்கும் மேற்பட்ட சுயமரியாதை திருமணங்களை நடத்திவைத்த வாய்ப்பு.

**பெற்றோர் :** ஆ.துரைக்கண்ணு பாக்கியம்மாள். அப்பா மந்திரவாதி, குத்துச்சண்டைவீரர், சாதாரண விவசாயக் குடும்பம்.

**உடன் பிறந்தோர்:** இருவர். துரைஞானசேகரன் (தம்பி) திராவிடமணி(தங்கை)

**வாழ்விணையர் :** கலைச்செல்வி

**மகன்:** அறிவுப்பொன்னிஎழில்வடிவன் (தற்போது வர்ஜினியாவில் உள்ளார்)

எனது குடும்பத்தில் நானும் சாதி மறுப்புத் திருமணம் எனது தம்பியும் அப்படியே. எனது மகனும் அப்படியே.

கொள்கை வாழ்வில் 100/100 வெற்றி பெற்றுள்ள பெருமிதம். நூற்றுக்கணக்கான இளைஞர்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ள மன திருப்தி. பலருக்கு நல்ல வாழ்க்கை அமைய உதவியதில் மகிழ்ச்சி. ●

---

# பெண்ணுரிமை விஞ்ஞானி பெரியார்


## கோ.செந்தமிழ்ச்செல்வி

### தலைமை ஆசிரியர்



தோழர்களே! தந்தை பெரியாரின் பெண்ணுரிமைக் களம் என்பது முழுமையான இலக்கினை கொண்டது. பெண்ணுரிமை போராளி தந்தை பெரியார் அவர்கள் பெண்களுக்கான சிந்தனைகளை, கருத்துகளை, போராட்டங்களை சமூகத்தில் முன்வைத்த போது, பெண்ணுரிமைக்கு தடையாக இருந்த அரசியல். ஜாதி, மதம், கடவுள், மூடநம்பிக்கை என்ற அனைத்தையும் எதிர்த்ததால் பல எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் எதிர் கொண்டார்.

பெண்ணடிமை ஒழிப்பை, தந்தை பெரியார் அவர்கள் ஏதோ வார்த்தைகளால் பேசிவிட்டு கடந்தவர் அல்ல. மாறாக, பெண்களே பெண்களுக்கான மாற்றங்களை விரும்பாத, ஏற்காத காலத்தில், அவர்களின் வசவு சொற்களையும் பொருட்படுத்தாது, “புரட்சிப் பெண்கள் மாநாடு” என மாநாடுகளையும், போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி, பெண்களின் மாற்றத்திற்கு வித்திட்டவர் பெரியார். எத்தனையோ பேர் பெண்களின் முன்னேற்றத்தினை பாடலாக, கதையாக, நாடகமாக தந்திருக்கலாம். ஆனால் அதை மாற்றமாகவும், அரசியல் வழியாக சட்டமாகவும் தந்தவர் பெரியார்.



இன்றைக்கும் பெரியார் சொன்ன கருத்தை நம் நலனுக்காக முன்வைத்துக் கொண்டே இருக்கிறோம். பெண்ணுரிமையைப் பற்றி பெரியார் பேசும் போது சமுதாய முன்னேற்றம் என்பது பெண்கள் முன்னேற்றத்தை தவிர்த்து, எப்படி சாத்தியம் எனக் கேட்டார். சமுதாயம் என்பது ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் அடங்கியது எனக் கூறினார்.

இன்றைய சுதந்திர நாட்டிலும், எங்கள் நிலையில் ஒரு கேள்வி வலுவாக உள்ளது. அது என்னவென்றால் “சுதந்திரம்” என்னும் நிலை ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவான ஒன்றாக இருக்க, இன்றைக்கும் பெண் சுதந்திரம் பற்றித் தனியாக பேச வேண்டி உள்ளதே? இதை ஒவ்வொரு பெண்ணும் ஏற்று, அதற்கான மாற்று நிலைக்கு களம் காண வேண்டும்.

இன்றைக்கு பெண்களுக்கு கிடைத்திருக்கின்ற ஓரளவு உரிமை என்பது, ஏதோ அயல்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட வாசனை திரவியம் அல்ல. அதை வாங்கி அடித்துக் கொண்டு நாம் கமகமக்கும் மணத்தோடு நடைபோடுகிறோம் என்பதல்ல. சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு பெண்ணும் பெண்ணின வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் தடைகளை உணர்ந்து அதை வென்று அடுத்தகட்ட நிலைக்குச் செல்ல முடியும்.

இறுதியாக கொடுத்த தலைப்பிற்கு வருகிறேன். “விஞ்ஞானி” என்ற சொல், சமூகத்தில் எந்தவொரு நிலையிலும் புதுமையை புகுத்தியவருக்கு பொருந்தும் என்று ஏற்கும்போது, பெண் சமூகத்தில் புதுமையை புரட்சியை புகுத்திட்ட ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியாரை “ பெண்ணுரிமை விஞ்ஞானி பெரியார்” என அழைத்து மகிழ்ச்சி கொள்கிறோம். இன்னொரு பெருமையாக தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்கள் ஒவ்வொரு மேடையிலும் முழங்குவார் என்னவென்று தெரியுமா தோழர்களே! உலகத் தலைவருக்கு “பெரியார்” என்ற பட்டமே பெண்கள் அளித்தது அத்தகைய சிறப்புக்குரியவர்கள் பெண்கள் என எங்களுக்குரிய பெருமையாக கூறும்போது நாங்களெல்லாம் நன்றிக்குரியவர்களாய் மகிழ்ந்து, அவர்பின் நடை போடுகிறோம் தந்தை பெரியார் பணி முடிக்கும் பணியில்.... ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்

கல்விக் கடவுள் சரசுவதி பிறந்த நாட்டில் தற்குறிகள் இருப்பது ஏன்?

# தமிழர் விளையாட்டுகள்

இன்றைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மனித சமூகத்தில் மாபெரும் மாற்றத்தை நிகழ்த்தியுள்ளது. மனிதர்களை நோயிலிருந்து காப்பதாக இருக்கட்டும், நவீன போக்குவரத்து வாகனங்களை வடிவமைப்பதாக இருக்கட்டும், எதிரி நாட்டின் மீது சரியாக குறி பார்த்து எய்தும் ஏவுகணைகளை வடிவமைப்பதாக இருக்கட்டும் வானில் சுற்றுவட்டப் பாதையில் செயற்கை கோளை நிலை நிறுத்துவதாக இருக்கட்டும் இப்படி எல்லாவற்றிலும் அறிவியல் அறிவின் தேவை மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. அதையும் தாண்டி ஆகாயத்தில் நகர்ந்துகொண்டேயிருக்கும் ஏவுகணைகளை எப்படி சரியாக குறிபார்த்து அடித்து வீழ்த்துவது என்று இயக்கவியல் அறிவை கணிதச் சமன்பாடுகள் வாயிலாக நமக்கு அறிவியல் சொல்லித்தருகிறது. இந்த இயக்கவியல் அறிவை தமிழர்கள் விளையாட்டின் வாயிலாக நமக்கு சொல்லிக்கொடுத்திருக்கிறார்கள் என்பதனை நாம் அவ்வளவு எளிதாக ஒதுக்கிவிட முடியாது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான ஊர்த்திருவிழாக்களில் விளையாடப்படும் விளையாட்டான உறியடித்தல் விளையாட்டைப்பற்றி தெரிந்துகொள்வோம். உறியடித்தல் விளையாட்டை சில இடங்களில் பானை உடைத்தல் என்றும் அழைக்கிறார்கள். தமிழர்கள் சிலவற்றிற்கு முரண்பட்ட பெயர் வைப்பதே வியப்பாக இருக்கும், கருப்பாக இருக்கும் ஆட்டிற்கு வெள்ளாடு என்றும் நல்ல பணக்காரனுக்கு பிச்சாண்டி என்றும் மழைக்குக் கூட பள்ளிக்கு ஒதுங்காதவனுக்கு பள்ளிக்கூடத்தான் என்றும் பெயர் வைத்திருப்பதைக் காணலாம். அதேபோல பானை உடைத்தல் என்பது ஒன்றின் அழிவைக்குறிப்பதாக உள்ளது என்பதால் அதை விளையாட்டுப் பானை என்றும் அழைக்கிறார்கள். எந்த பெயரில் அழைத்தாலும் உறியடித்தல் என்ற விளையாட்டு தமிழகம் முழுக்க ஒரேமாதிரியே விளையாடுகின்றார்கள். அதை எப்படி விளையாடுவது அது நமக்குச் சொல்லிக்கொடுக்கும் படிப்பினை என்னவென்று பார்ப்போம்.

உறியடித்தல் அல்லது பானை உடைத்தல் விளையாட்டு பொங்கல் பண்டிகையின் மூன்றாம் நாளில் நடைபெறும் ஜல்லிக்கட்டு, வழுக்குமரம் ஏறுதல், கயிறு இழுத்தல், மஞ்சுவிரட்டு என்று விளையாடப்படும் விளையாட்டுகளில் ஒன்றாகவோ அல்லது கிருஷ்ண ஜெயந்தி அல்லது ஊர் திருவிழாவை முன்னிட்டோ நடத்தப்படும் தமிழர் விளையாட்டாகும். இளைஞர்களால் விளையாடப்படும் இந்த விளையாட்டு என்பது கண்ணைக் கட்டிக்கொண்டு பானையை உடைக்க வேண்டும். நாம் நினைப்பது போன்று கண்ணைக்கட்டிக்கொண்டு பானையை உடைப்பது அவ்வளவு எளிதல்ல. இந்த விளையாட்டை எப்படி விளையாடுவது என்று கிராமத்தில் பார்த்தவர்களுக்கு தெரியும் என்றாலும் நகரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமது அடுத்த தலைமுறைக்கு இதை சொல்லிக்கொடுப்பது நமது கடமை எனவே அதை எப்படி விளையாடுவது என்று பார்ப்போம். விழாக்காலங்களில் நடைபெறும் இந்த விளையாட்டை விளையாட இரு மூங்கில் கம்புகள் நடப்பட்டு அவற்றிற்கு இடையே கயிற்றைக் கட்டி, கயிற்றின் நடுவே மண்பானையை ஒரு கயிற்றில் கட்டி தொங்கவிடப்பட்டிருக்கும். சற்றுத் தூரம் தள்ளி எல்லைக்கோடுகள் போடப்பட்டிருக்கும்.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் அனைவரும் அந்த எல்லைக் கோட்டில் வரிசையாக நிற்க வேண்டும். கலந்து கொள்பவர்களின் கண்ணையெல்லாம் ஒருவர் துணியால் கட்டி அவர்கள் கையில் ஒரு நீளமான கம்பை கொடுத்து, அவர்கள் திசையினைக் கண்டுபிடிக்க முடியாதவாறு நான்கைந்து சுற்றுகள் சுற்றி விடுவார்.இவ்வாறு சுற்றி விடுவதால் பானையிருக்கும் திசையை அவ்வளவு எளிதாக

## உறியடித்தல்



குறிப்பால் அறியமுடியாது. குறிப்பிட்ட நேரத்திற்குள் பானை இருக்கும் திசை நோக்கிச் சென்று,கையிலுள்ளகம்பினால் யார் பானையினை உடைக்கிறார்களோ அவரே போட்டியில் வென்றவராவர். அவருக்கு பரிசுகள் வழங்கப்படும். பானையை உடைப்பது அவ்வளவு எளிதன்று. ஏனென்றால் சுமார் 20 அடி உயரத்தில் பானையை உரி கயிற்றால் கட்டி தொங்க விட்டிருப்பர். மேலும் கண்ணைக்கட்டிக்கொண்டு இருப்பவர் கம்பில் பானையை அடிக்கும் போது தொங்கும் பானையை ஒருவர் கீழும் மேலுமாக ஏற்றி இறக்குவார், அதனால் அது அடிப்பவர்க்கு மேலும் சிக்கலைத் தரும். அதாவது கண்ணைக் கட்டிக்கொண்டே ஏறி இறங்கும் பானையை குறிபார்த்து அடித்து உடைக்க வேண்டும். போட்டியில் கலந்து கொள்பவர் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் பானையை உடைப்பதொடு மட்டுமல்லாமல் எல்லைக் கோட்டை தாண்டாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு பானையைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் உடைப்பதற்கு மூன்று வாயப்புகள் கொடுக்கப்படும். அதற்குள் உடைக்காதவர்கள் தோற்றவராவார். அவரது கண்கள் அவிழ்த்து விட்டு அடுத்தவருக்கு விளையாட வாய்ப்பு கொடுக்கப்படும். கண்ணைக்கட்டிக்கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் பானையின் ஏற்ற இறக்கத்தை கவனித்து பானையை உடைப்பவர் வெற்றி பெற்றவராவர். அவருக்கு பரிசுகளும் பணமுடிப்புகளும் கொடுக்கப்படும். உறியடி விளையாட்டைப் போலவே உரிமர விளையாட்டு என்றொரு விளையாட்டும் உண்டு. உரிமர விளையாட்டில் தயிர்ப் பானையை வழுக்குமரத்தில் ஏறி எடுக்கவேண்டும். உறியடி விளையாட்டில் தொங்கும் பானையை அல்லது உரியை அடிக்கவேண்டும்.

தமிழர்களால் மரபு வழியாக விளையாடப்பட்டு வந்த விளையாட்டுகள் தமிழர் விளையாட்டுகள் ஆகும். இதில் பல விளையாட்டுகள் தென்னிந்தியாவில் பரவலாக விளையாடப்படுவதோடு ஒரு சில மாற்றத்தோடு உலகமெங்கும் விளையாடப்படுகின்றன. பிலிப்பைன்ஸ் நாட்டிலிலும் இளைஞர்களால் உறியடித்தல் விளையாட்டு விளையாடப்படுகிறது. அங்கு பானையில் பண முடிப்புகளும், பரிசுப்பொருட்களும், உணவுப்பொருட்களும் நிரப்பி தொங்கவிடப்படுகிறது.

யார் எந்த பானையை உடைக்கிறார்களோ அதில் உள்ள பொருளே அவர்களுக்கு பரிசாக வழங்கப்படும். இளைஞர்கள் கண்ணைக்கட்டிக்கொண்டு பானையை உடைப்பதைப் போலவே அங்குள்ள குழந்தைகளுக்கும் பெரிய தொப்பியை அணிவித்து கண்களை மறைத்து ஆசிரியர் சொல்லக்கூடிய திசைகளில் சென்று அந்த அறையில் வைக்கப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை கண்டுபிடிக்க பள்ளிகளிலேயே பயிற்சியளிக்கின்றனர். இந்த பயிற்சி குழந்தைகளுக்கு மொழியை நன்கு புரிந்துகொண்டு உள்வாங்குவதற்கான பயிற்சியாகவும் விளங்குகிறது. எழுத்துக்களை கற்றுக்கொள்ளவும், திசைகளைப் புரிந்து அதன் படி இயங்கவும் குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளியின் வகுப்பறையில் இந்த விளையாட்டின் வாயிலாகப் பாடம் கற்பிக்கிறார்கள்.

ஜெர்மன் நாட்டில் குழந்தைகளின் பிறந்தநாள் விழா கொண்டாட்டதின்போது கண்ணைக் கட்டிக்கொண்டு ஆடும் உறியடி விளையாட்டைப்போன்றதொரு விளையாட்டு விளையாடப்படுகிறது. பிறந்தநாள் விழாவில் குழந்தைகளை வட்டமாகச் சுற்றி நிற்க வைத்து விட்டு நடுவில் ஒரு குழந்தையை நிற்க வைக்கிறார்கள். நடுவில் நிற்கவைக்கும் குழந்தையின் கண்களை கட்டி இரண்டு மூன்று முறை சுற்றி அந்த குழந்தையின் கையில் ஒரு கரண்டி தரப்படுகிறது. அந்த நேரத்தில் பிறந்தாள் கொண்டாடும் குழந்தை அந்த குழந்தைக்கான பரிசை ஒரு பானையில் போட்டு அந்த அறையின் ஏதோவொரு இடத்தில் வைக்கும். சுற்றி விடப்பட்ட குழந்தை அந்த அறையில் குழந்தை போல தவழ்ந்து கொண்டே சென்று அங்குள்ள



பொருட்களின் மீது கரண்டியால் தட்டித் தட்டி அவர்களுக்கான பரிசுப்பொருளை கண்டுபிடிக்கவேண்டும். அவ்வாறு கண்டுபிடிக்கும் போது மற்ற குழந்தைகளும் சத்தம்போட்டு கொண்டாடி மகிழ்வர். இதேபோன்று மற்ற குழந்தைகளும் தங்களுக்கான பரிசுப்பொருட்களைக் கண்டுபிடிக்கும்வரை கண்களைக் கட்டிக்கொண்டு விளையாடி மகிழ்வார்கள். ஜெர்மனைப் போல் சுசர்லாந்து மற்றும் கொரியா நாடுகளிலும் குழந்தைகளின் பிறந்தநாள்விழாவின் போது குழந்தைகளால் இந்த விளையாட்டு விளையாடப்படுகிறது.

இலங்கையிலும் இதேபோன்றதொரு விளையாட்டு புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது விளையாடப்படுகிறது. இங்கு ஒரு பானைக்கு பதில், வரிசையாக பல பானைகளை தலைக்கு மேல் குறிப்பிட்ட உயரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும். அதில் ஒரு பானையில் மட்டும் அவர்களுக்கான பரிசுப்பொருள் இருக்கும் பெரும்பாலும் பணமுடிப்பு இருக்கும், மற்ற பானைகளில் எல்லாம் மணலோ, தண்ணீரோ, வண்ண நீரோ, வெறும்காகிதங்களோ இருக்கும். யார் கண்ணைகட்டிக் கொண்டு சுற்றி விட்ட பிறகு மூங்கில் கம்பைக் கொண்டு சரியான பானையை அடையாளம் கண்டு உடைக்கிறார்களோ அவர்களே வெற்றிபெற்றவராவார், அவருக்கு பண முடிப்போ பரிசுப்பொருளோ வழங்கப்படும்.

இந்தியாவில் குறிப்பாக குஜராத்திலும் மகராஷ்டிராவிலும் கிருஷ்ண ஜெயந்தியின் போது இதுபோன்ற விளையாட்டு பள்ளியில் விளையாடப்படுகிறது. உயரத்தில் தொங்கும் வெண்ணெய் பானையை பல மாணவர்கள் ஒன்று சேர்ந்து பிரமிடு போல் ஒருவர்மீது ஒருவர் ஏறி நின்று உயரத்தில் இருக்கும் பானையை எடுப்பார்கள். இது மனிதப் பிரமிடு விளையாட்டு என்று அழைக்கிறார்கள். இவை அனைத்தும் தமிழர்களின் உறியடித்தல் விளையாட்டின் பல்வேறு வடிவிலான விளையாட்டுகளே.

இன்று ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பின் ஆங்கிலக்கல்வி மோகத்தாலும் பல மேல் நாட்டு விளையாட்டுகளின் மோகத்தாலும் கண்டுகொள்ளப்படாமல் இருக்கும் உறியடித்தல் போன்ற விளையாட்டுகளை பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சொல்லிக்கொடுப்பதன் மூலம் அந்த விளையாட்டை அழியாமல் காக்கலாம். அரசும் இதுபோன்ற விளையாட்டைப் பள்ளிகளில் விளையாட ஊக்குவிக்க வேண்டும்.

இந்த விளையாட்டு இயங்கிக்கொண்டிருக்கும் பொருளின் மீது குறிவைத்துத் தாக்கும் திறமையை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் உடல் மற்றும் மனநலத்தை மேம்படுத்தி தன்னம்பிக்கையைக் கொடுக்கிறது.

கண்மூடிக்கிடந்தாலும் இலக்கை அடையந்து வெற்றிப்பாதையில் பயணிக்கத் துணை நிற்கும் இதுபோன்ற விளையாட்டுகளை நம் பிள்ளைகளுக்கும் சொல்லிக்கொடுப்போம். தோல்விகளையும் நம்பிக்கையால் வெல்லும் ஊக்கத்தை அள்ளிக்கொடுப்போம்.

**– இன்னும் விளையாடலாம்**



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்

முப்பது முக்கோடி தேவர்கள் இருந்தும்,
இந்தியாவில் பல கோடி பேருக்கு உணவும், வேலையும் இல்லையே ஏன்?

தோழர் **திராவிடராசன்**

# மதவாதமும் பலாத்காரமும்



மதம் மனிதனின் அறிவை கெடுத்து, மனிதனின் மேன்மைக்கு முற்றாக இடையூறுகளை ஏற்படுத்தி மடமைக்கு வழிவகுப்பதை ஆய்வுகள் வழியே அங்குலம் அங்குலமாக அம்பலப்படுத்தினாலும் மதவாதிகள் திருந்துவதில்லை.காரணம்,மதவாதிகளெல்லாம் தங்களின் பிற்போக்குத்தனங்களை மக்களை கவர்ந்திழுக்கும் வண்ணமாக மத அரசியலாக தங்களை நிறுவனமயப்படுத்தி, தங்களை மக்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட சர்வரோக நிவாரணியாக சித்தரித்து அதனுள்ளே ஒளிந்து கொண்டு பல்லாயிரம் கோடிகளை பதுக்கி பகட்டாக வாழ்வதும், பல லட்சம் ஏக்கர் நிலங்களை எளியவர்களிடமிருந்து பறித்து பங்களா போன்ற மடங்களை நிறுவுவதும், பகவான் அருள் என்றுரைத்து பாலியல் வக்கிரங்களை செய்வது என சமூகத்தின் பெரும்பான்மை குற்றங்களின் தளகர்த்தர்களாக மதவாதிகள் விளங்குகின்றனர்.

மதவாதத்தின் ஊடாகச் செய்யப்படும் சமூகக் குற்றங்களில் முதன்மையானதும், நேரடியாக மனிதனின் உடலுக்கும் உயிருக்கும் கேடுகளை விளைவிக்கும் பாலியல் வக்கிர வன்முறைகளை அனைத்து மதங்களும் மென்மையாகக் கண்டிப்பதும், மிருதுவாக ஒழுங்குபடுத்துவதுமான கண்டும்காணாத போக்குகள் எப்போதும் தொடர்ந்துகொண்டே தான் இருக்கும். ஏனெனில், இன்றளவும் ஒவ்வொரு மதமும் பெண்கள் மீதான கண்ணோட்டத்தை அடிப்படைவாதத்திலிருந்து மாற்றவுமில்லை, மதமா? மனிதமா? என்றால் மதத்தின் பக்கம் சாய்ந்து நின்று மனிதனை காவுவாங்கத் தயங்குவதுமில்லை. இப்படிப்பட்ட சாதகமான சூழல்களினாலேயே மதவாதிகளின் வெறியாட்டங்கள் கூடுதலாக பீடுநடைபோடுகிறது.

கதுவாவில் கோவிலுக்குள்ளேயே சிறுமி பலாத்காரம் செய்து படுகொலை செய்யப்பட்ட போதும் கூட இந்துத்துவம் பேசும் ஆசாமிகள் வெறுமனே உச்சுக்கொட்டித்தான் நகர்ந்தார்கள் இதற்காக அதிர்ச்சி கொள்ளத்தேவையில்லை, சதாசர்வகாலமும் ஆலயங்களும் மடங்களும் மதவாதிகளுக்கும் மடாதிபதிகளுக்கும் தானே உறுதுணையாக நின்றிருக்கிறது. பிரேமானந்தா, குர்மீத் ராம் ரஹீம், விக்ரம் சவுத்ரி, ஆசாராம் பாபு, நித்தியானந்தா, தேவநாதன் என எல்லோர் செய்த அட்டூழங்களையும் அரவணைத்தபடி நின்ற மதம் மக்களுக்கு நன்மை விளைவிக்கும்படி மாற்றமடையவில்லை. மாறாக, மக்களின் நுகர்வுமய ஓட்டத்திற்கு தக்கவாறு மதபீடங்களின் வெளியே வர்ணம் பூசி தகவல் தொழிற்நுட்ப உதவியுடன் மக்களிடம் மூடத்தனங்களை மேலும் வளர்த்தெடுக்கின்றன.



கேரளத்தின் பாதிரியார்களோ பாவ மன்னிப்பு கேட்க வந்த ஐந்து பெண்களை பாலியல் வன்முறை செய்து மதவாத வக்கிரங்களுக்கு நாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்று பறைசாற்றிக்கொண்டுள்ளனர்

உலகம் முழுவதிலும் உள்ள பாதிரியார்களின் "கிரிமென்" என்ற ரகசியம் காத்தலில் பாதிரியார்களின் பாலியல் வக்கிரங்கள் வெளியே தெரியாதபடி பார்த்துக்கொள்ளும் ரகசிய நடவடிக்கையே பிரதான ரகசியம் காத்தலாகும். அற்புதங்களை உலகுக்கு சொல்லும் மதங்கள் அவலங்களை மட்டும் புதர்களுக்குள் மறைப்பது நியாயமில்லை. 2015 ம் ஆண்டு செய்த பாலியல் குற்றத்திற்காக பாதிரியார் எட்வின் பிகார்ஸ்க்கு நீதிமன்றம் தான் தண்டனையளித்ததே தவிர மத பீடங்கள் சிறு துரும்பும் கிள்ளிப் போடவில்லை. இதுதான்மனிதர்கள் மீதான மதங்களின் கோரப் பார்வை .

பல ஆயிரக்கணக்கான இஸ்லாமியப் பெண்கள் மதவாத ஐ.எஸ் அமைப்புகளுக்கு பாலியல் அடிமைகளாக்கப்படுவதும், பிரபல சர்வதேச மதபோதகர் தாரிக் ரமலான் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள், பீகாரில் 8 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த 65 வயது ஹபீஸ் முஜிபுர் ரஹ்மான், அரபு நாடுகளில் பாலியலுக்கு உடன்பட மறுத்த பெண்களுக்கு நடுசாலையில் கல்லடி தண்டனை போன்ற எண்ணற்ற வன்முறைகளை எவரும் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. பெண்களை விளைநிலங்கள் என்பதும், விளைநிலத்தை ஆண் எவ்விதங்களிலும் பயன்படுத்தலாம் என்பதும், மாதவிடாய் தீட்டு என பெண்களை ஒதுக்கும் அத்தனை செயல்களும் ஏனைய பிற்போக்கு மதங்களின் சாயலை ஒத்தே இருக்கிறது. பாலியல் அடிமைகளை எங்கள் மதம் அங்கீகரித்துள்ளது என பிரித்தானிய இஸ்லாமியத் தலைவர் இமாம் அலி ஹமூதா போன்றவர்கள் பேசிவரும் வேளையில் மனிதநேய மாற்றங்கள் என்பது இஸ்லாத்திலும் இல்லாத ஒன்று என்றே தோன்றுகிறது.

பல்வேறுபட்ட மதங்களும் மனிதன் வெறும் கருவி, எல்லாவற்றையும் நிகழ்த்துபவன் கடவுள் என்று சொல்லி மனிதனை பதுமைகள் போன்றவர்களாகவும், உணர்ச்சியற்றவர்களாகவும், மதங்களையும் மனிதர்களுக்கெதிரான மரபுகளையும் கேள்வியெழுப்பவோ விமர்சனம் செய்யவோ உரிமையற்றவர்களாகவும் எல்லாம் அவன் செயல் என்று நிறுவும் போது மனிதனின் சிந்திக்கும் ஆற்றல் பாழாகி மனிதன் மதங்களினால் மிருகமாகிறான். இதனாலேயே தான் தந்தை பெரியார் "மதம் அறிவை அழிக்கும்" மதம் மனிதனை மிருகமாக்கும்"என்றார்.

காட்டில் வாழும் மிருகங்களை விட மதங்களினால் மாறிவிட்ட மனித மிருகங்கள் பேராபத்தானவை! மதங்கள் ஒழியட்டும்! மனிதம் தழைக்கட்டும்! ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
ஆத்திகனைப் படைத்த கடவுள், நாத்திகனைப் படைத்தது ஏன்?

# அய்ம்பது ஆண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியில்

# தமிழகம் வளர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா?



பார்த்திபன்.ப
பொறியாளர்



**2**

### மறைக்கப்பட்ட உண்மைகள்:-

மௌலானா முகமது அலி மற்றும் சவுகத் அலி ஆகியோர்களின் தியாகத்தை மறைத்துவிட்டு இந்திய துணைக்கண்டத்தின் வரலாற்றை எழுதிவிட முடியுமா என்று தெரியவில்லை. இறுதியாக 1915இல் இந்தியா திரும்பிய காந்தி, இந்திய தேசிய இயக்கத்தில் தம்மை முழுமையாக பங்கேற்று வழி நடத்திச் சென்றார். அதற்கு பொருத்தமான காரணம் வேண்டுமல்லவா? இங்கிலாந்தில் சட்டம் பயின்று 1891இல் இந்தியா திரும்பியவர் மீண்டும் 1893இல் தென் ஆப்ரிக்கா சென்று அங்கு நிலவிய இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான போராட்டத்தில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதும் ஒரு காரணமாக வரலாற்று ஆய்வாளர்களால் பார்க்கப்படுகிறது.

எனவே 1917 முதல் 47 வரையிலான இந்த காலக்கட்டத்தில் காந்தி தேசிய இயக்கத்தின் தன்னிகரற்ற மற்றும் ஏகபோக தனியுரிமைபெற்ற (*Monopoly*) தலைவராக விளங்கினார். இந்திய துணைக்கண்டத்தின் காலங்கள் அவசியத்தினாலோ அல்லது அவசரத்தினாலோ காந்தியின் பெயரால் மட்டுமே எழுதப்படுகின்றன. என் தோளின் மீது இரண்டு சிங்கங்கள் அமர்ந்திருக்கின்றன என்று காந்தியே பலமுறை குறிப்பிட்டதுண்டு ஆதலால் மௌலானா முகமது அலி மற்றும் சவுகத் அலி சகோதரர்களை தவிர்த்துவிட்டு வெறும் காந்தியின் கதைகளை எழுதுவது நேர்மையாகாது.

1917-ஆம் ஆண்டு சர் சிட்னி ரௌலட் என்பவரது தலைமையில் அரசுக்கு எதிரான சதி வேலைகளை செய்பவர்களை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு உருவாக்கப்பட்டு அது அளித்த அறிக்கையின் விளைவாக மார்ச் 1919 ஆம் ஆண்டு கருப்பு சட்டம் என்று அனைவராலும் கருதப்பட்ட அதாவது சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யலாம். இத்தகைய கைதுகளை எதிர்த்து விண்ணப்பமோ அல்லது மேல்முறையீடோ செய்ய முடியாது என்கிற "ரௌலட் சட்டம்" மத்திய சட்டசபையில் கொண்டு வரப்பட்டது. இதனால் ஏப்ரல் 1919 முதல் நாடு முழுவதும் போராட்டங்கள் எழுந்தன. டெல்லியில் காந்தியும் டாக்டர் சத்யபால் மற்றும் டாக்டர் சைபுதீன் கிச்லு எனும் பஞ்சாபின் முக்கிய தலைவர்கள் பஞ்சாபிலும் கைது செய்யப்பட்டனர்.

நடந்த நிகழ்வு மற்றும் நடக்கப்போகும் எதிர்கால சம்பவங்கள் யாவும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாகவும் தனித்து பிரிக்கமுடியாதவைகளாவும் இருக்கின்றன. ஆனால் இதில் ஒரு நன்மையும் உள்ளது. அதாவது கடந்த கால அனுபவங்களிலிருந்து நிகழ்காலத்தை சிறப்பாக்கமுடியும் அதையே இன்னும் எதிர்கால வரலாற்றில் மெருகேற்றிவிடவும் முடியும் எனில், நமக்குத்தேவை நாம் நம்முடைய சந்ததிக்கு சேர்த்துவைக்கும் உண்மை வரலாறு மட்டுமே.

முதலாளித்துவ நிலஉடமையின் மிச்சங்களிலிருந்தும், ஏகாதிபத்திய காலனியாதிக்க நாடுகளின் அடாவடிப்போக்கிலிருந்தும் நம்மை விடுவித்துக்கொள்ள எந்த வடிவிலும் மனிதனை மனிதன் சுரண்டுதலற்ற ஒரு சோசலிச குமுகாயத்தை உருவாக்குவதுமாகும். அதற்காக நமது சமுதாயத்தின் எதிர் காலத்திற்கான பாதையை வகுக்கவும் கடந்த காலத்தின் நேர்மறையான மற்றும் எதிர்மறையான அனுபவங்களிலிருந்து பாடங்களை இன்றைய அரசியலாளர்கள் சமூக ஆர்வலர்கள் இன்னபிற அமைப்புகள் என எதுவாயினும் அதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

எந்த வகையான சுரண்டலும் ஒடுக்குமுறையும் இல்லாத நவீன சனநாயக குடியரசை நிறுவ வேண்டுமென முடிவெடுத்ததன் விளைவாக; ஒரு நூற்றாண்டுக்கு முன்பு உலகை மறு பங்கீடு செய்வதற்காக, உலகப் போரில் பிரிட்டன் மூழ்கி இருக்கும் அந்தத் தருணத்தை ஆங்கிலேய ஆட்சியைத் தூக்கியெறிவதற்கான வாய்ப்பாக கெதர் போராளிகள் கண்டனர். இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவிய காலனிய எதிர்ப்புப் போராட்ட வரலாற்றில் 1915 எழுச்சி, மிகவும் புரட்சிகர அத்தியாயங்களில் ஒன்றாக இருந்தது என்றால் மிகையல்ல.

1914இல் அமெரிக்கா, கனடா மற்றும் உலகின் மற்ற நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான கெதர் போராளிகள் இந்தியாவுக்கு வந்து அவர்கள் பல கொடுமைகளை

■ ஒரு வரலாற்று ஆய்வு



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
பசியால் வாடும் குழந்தைக்குப் பால் கிடைக்காத நாட்டில்,
கல் பொம்மைக்குப் பால் அபிஷேகம் ஒரு கேடோ?



சந்தித்தபோதிலும்; கொடுமைகளைக் கண்டு அஞ்சி கெதர் போராளிகள் பின்வாங்கவில்லை. மாறாக ஆசாத் இந்துஸ்தான் அதாவது சுதந்திர இந்தியாவை ஆப்கானிஸ்தானில் அவர்கள் அமைத்தனர். எந்த வகையான சுரண்டலும் இல்லாத புதிய இந்தியாவை உருவாக்கும் கனவிலேயே வாழ்ந்த கெதர் போராளிகள் பிரிட்டிஷ் காலனி ஆட்சியிலிருந்து விடுதலையை முன்னெடுக்க தொடர் போராட்டங்களை அவர்கள் முயற்சித்தனர்.

அதே நேரத்தில் 1920இல் உருவான துருக்கி செவெரஸ் உடன்படிக்கையும் பிரிட்டன் துருக்கியை நடத்திய விதமும் உலக மற்றும் இந்திய முஸ்லீம்களை புண்படுத்துவதாக இருந்தது மற்றுமின்றி அது அவமானப்படுத்துவதாகவே இருந்தது. 1919 அக்டோபர் 19ஆம் நாள் இந்தியாவில் கிலாபத் தினம் அனுசரிக்கப்பட்டதை தொடர்ந்து மௌலானா அபுல் கலாம் ஆசாத், எம்.ஏ. அன்சாரி, சைபுதீன் கிச்லு, அலி சகோதரர்கள் இயக்கத்தை தலைமையேற்று நடத்தினர். இதைக்கண்ட நமது காந்தி நிலைமையைப் புரிந்துகொண்டு நவம்பர் 23ஆம் நாள் தமது தலைமையில்; இந்துக்களும் முஸ்லீம்களும் கலந்து கொண்ட ஒரு மாநாடு கூடியது. அதில் நாட்டின் விடுதலை ஒற்றுமைக்காக இந்து முஸ்லீம் ஒன்றாக பாடுபட ஏதுவாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இவ்வாறாக உருவான கிலாபத் இயக்கம் 1920இல் ஒத்துழையாமை இயக்கமாக மறுபிறவி எடுத்து உருப்பெற்றது.

எப்பொழுதும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஏவலாளிகளையே நம்பிக்கொண்டிருந்த காந்தி எந்தவிதமான ஒப்பந்த உடன்படிக்கையுமின்றி மற்றும் நிபந்தனையற்ற ஆதரவாக அதாவது இவராகவே கற்பனை செய்துகொண்டு இவர் தரப்போகும் உதவியால் பிரிட்டன் மனம் மகிழ்ந்து இந்தியாவிற்கு சுயாட்சி அந்தஸ்து கிடைத்துவிடும் என்று எண்ணியதன் விளைவாக; இந்தியர்களை அணி திரட்டி பிரிட்டிஷ் யுத்த நடவடிக்கைகளுக்கு அனுப்புவித்தார். இதனால் கொத்துக்கொத்தாக இறந்தவர்கள்தான் மிச்சம். அந்தஸ்தும் வரவில்லை அதிகாரமும் கிடைக்கவில்லை என்பதை நாடறியும்.

இவர் அதோடு விட்டிருந்தால் பரவாயில்லை எனலாம் ஆனால் இவர் செய்த பிழையால் மதசார்பற்ற இந்திய நிலப்பரப்பின் சுயாட்சி சிந்தனைகளுக்கு இந்த இயக்கத்தினருடைய கொள்கைகள் மிகப்பெரிய சவாலாக அமைந்தத்துடன் இதனால் இந்து-முஸ்லீம் மதச்சண்டைகள் தலைதூக்கின. பிற்போக்கு கொள்கைகளையும், தேசிய சுதந்திரத்திற்கு எதிரான மனநிலையையும் கொண்டிருந்த கிலாபத் இயக்கம் தோல்வியை நோக்கி பயணிப்பதை அறிந்துகொண்ட காந்தி எவ்வளவு முயன்றும் இவரது தவறான பிழையால் கிலாபத் இயக்கத்திடம் இருந்து காந்திய மக்கள் இயக்கத்தை பிரித்தெடுத்து வெளிக்கொண்டு வர, பயங்கரமாக மதச் சண்டைகளை கட்டவிழ்த்தது கிலாபத் இயக்கம். இரு மதங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மனித உயிர்கள் காந்தியின் பிழைக்கு பலியாகின என்பது ஒரு தனி வரலாறு.

வெள்ளையர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியை மறைமுகமாக நிறைவேற்றுவதற்காக ஒப்புக்கொண்ட காரணத்திற்காக 1910களின் மத்தியில் இந்து மகா சபை எனும் இந்துத்வா அமைப்பு தொடங்கப்பட வெள்ளையர்களால் அனுமதிக்கப்படுகிறது. 1911ஆம் ஆண்டு அந்தமானில் இரட்டை ஆயுள் தண்டனைக்காக சிறைவைக்கப்படும் சாவர்க்கர், ஆறே மாதத்தில் ஆங்கிலேயருக்கு அனுப்பிய மன்னிப்புக் கடிதங்கள் மற்றும் அதை தொடர்ந்த மனம் குளிர்ந்த வெள்ளையர்களால் சிறை வாழ்க்கையிலிருந்து விடுவிக்கப்படுகிறார். வெள்ளையனை எதிர்த்து ஒரு எழுத்து கூட எழுதக்கூடாது, ஒரு சொல் கூட பேசக்கூடாது என்பதற்காக விடுதலை பெற்ற சாவர்க்கர் ஒத்துழையாமை இயக்கத்தின் அருகில் கூட செல்லவில்லை. மேலும் அந்த இயக்கத்தை அவர் எதிர்த்திருக்கிறார். ஏனெனில் கிலாபத் இயக்கத்தின் தொடர்ச்சியாக வந்த ஒத்துழையாமை இயக்கம் என்பது முஸ்லீம்களுக்கு ஆதரவானது என்பதே அவர் கருத்து.

அதே நேரத்தில் 30ஆம் தேதி அக்டோபர் 1920இல் லாலா லஜபதிராய் தலைமை தாங்க AITUC ( All India Trade Union Congress) பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது. ரஷ்யப் புரட்சியின் வெற்றியும் - அங்கு அமைந்த தொழிலாளர் நல அரசும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. அதைத்தொடர்ந்து 1921இல் அகமதாபாத்திலும், 1922இல் கயாவிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடுகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. தேயிலை தோட்ட நிலப்பிரபுக்களின் அட்டகாசங்களை எதிர்த்துத் அசாமில் தொழிலாளர்கள் போராட்டங்கள் நடத்தியதால் அங்குள்ள கூர்க்கா சிப்பாய்களால் அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆதரவாக அசாம் மற்றும் வங்காளத்தில் உள்ள ரெயில்வே தொழிலாளர்களும், துறைமுகத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்தனர் எனினும்; நம்முடைய காந்தி மட்டும் எவ்வளவு குருதியைக் கண்டாலும் எவ்வளவு நேர்மையான காரணங்களுக்காகப் போராடி மக்கள் தம்முடைய உயிரையே கொத்துக்கொத்தாகக் கொடுத்தாலும்; வன்முறை வேண்டாம் அகிம்சை முறையில் மட்டுமே போராட்டம் இருக்கவேண்டும் என்று சொல்வதிலிருந்து நாம் இவரைப்பற்றி எப்படி அல்லது என்ன புரிந்துகொள்ளவேண்டும் என்பதை தோழமைகளாகிய உங்களிடமே விட்டுவிடுகிறேன்.

காவல்துறையின் கடினதாக்குதல்களை பொருட்படுத்தாமல் மக்கள் அநீதிக்கு எதிரான இயல்பான ஆவேசத்தோடு கடுமையான போர் செய்தார்கள் ஆகையால்; இதை உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள சௌரி- சௌராவில் விவசாயிகள் தங்கள் எதிர்ப்புக் குரலை ஆர்ப்பட்டங்கள் நடத்தித் தெரிவித்தார்கள். இதனால் கோபமடைந்த காவல் துறையினர் போராட்டக்காரர்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். தாக்குண்ட மக்கள் காலம் காலமாய் உறைந்து போன கோபத்தின் வெளிப்பாடாய் காவல் நிலையங்களுக்கு தீ வைத்ததுடன் 22 காவலர்களையும் கொன்றார்கள். இதனால் ஜவகர்லால் நேரு உள்ளிட்ட பல தலைவர்களும், மக்களும் ஏமாற்றம் அடைந்தனர் என்பது ஒருபுறமிருந்தாலும்; எந்த காங்கிரஸ் தலைவரும் பாதிக்கப்பட்ட சௌரி சௌரா மக்களுக்கு ஆதரவாக தங்கள் வாயைத் திறக்கவில்லை என்பதுதான் மாபெரும் அதிர்ச்சியே. இதனால் 1922இல் சௌரி சௌராவில் நடந்த ‘வன்முறை’ சம்பவத்தை அடுத்து தன்னுடைய ஒத்துழையாமை இயக்கத்தை திரும்ப பெறுகிறார் காந்தி.

ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தி, விடுதலைப் போராட்டத்திற்கு காந்தி இழைத்த துரோகத்தை கண்டு சினமுற்றவர்கள் சாவர்க்கர், ஹெட்கேவார் முதலானவர்கள் அல்லர். அவர்கள் சந்திரசேகர ஆசாத், பகத்சிங் முதலான தோழர்கள். அவர்கள் ஆரம்பித்த அந்த புரட்சிப்பணிதான் அடுத்த பத்தாண்டுகளில் இந்திய வானில் மையமாக இருந்தது. 1931ஆம் ஆண்டு ஒரு சிங்கம் போல பகத்சிங் தூக்குமேடையில் நின்று கொண்டிருந்தபோது, காவிப்பயங்கரவாதிகள் வெள்ளைக்காரராகளுடன் அவர்களது கொடையோடு மைதானத்தில் விளையாடிக்கொண்டும் கும்மாளம் அடித்துக்கொண்டுமிருந்தார்கள்!

அதே நேரத்தில் இங்கே இந்திய துணைக்கண்டத்தின் தென்கோடியில் என்ன நடந்தது? தெரிந்துகொள்ளவேண்டாமா? இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்காட்லாந்து மற்றும் அயர்லாந்து தீவிலுள்ள வடக்கு அயர்லாந்து என மொத்தமாக நான்கு பகுதிகளை உள்ளடக்கிய பிரித்தானியா என்று அழைக்கப்படும் ஐக்கிய இராச்சியத்தின் ஒரே சர்வதேச நில எல்லையாகும். பிரித்தானிய ஆட்சி இந்தியாவில் வலுவாக வேரூன்றிய பிறகு அதாவது 1800களில் கிழக்கிந்திய கம்பெனிகளின் வருவாய் மற்றும் வர்த்தக வாரியங்கள் வலுபெறவேண்டியும் நிர்வாக வசதிகளுக்காகவும் அய்ரோப்பிய காலனிய ஆட்சியினால் சென்னை மாகாணம் உருவாக்கப்பட்டது.

உத்திரபிரதேசம் போன்ற வட இந்திய பகுதிகளில் செய்த அதாவது இந்து முஸ்லீம்களை தனிமைப்படுத்தி அவர்களுக்குள் சண்டையையும் வன்முறைகளையும் உருவாக்கிய பிரித்தாளும் சூழ்ச்சியை இங்கே குறிப்பாக சென்னை மாகாணத்தில் ஆங்கிலேயே ஏகாதிபத்திய காலனியாதிக்க அரசுகளால் செய்ய இயலவில்லை காரணம் இங்கே பார்ப்பனர் மற்றும் பார்ப்பனரல்லாதார் விகிதமே என்க. இதனால் இங்கே மாற்று முறையை தெரிவு செய்தது ஆங்கிலேயே அரசு. வட்டார வழக்கில் கைநாட்டுச் சட்டம், கைரேகைச் சட்டம் என அழைக்கப்பட்ட குற்றப்பரம்பரை எனும் சட்டத்தை 1911இல் ஏறத்தாழ இருநூற்றுக்கும் மேற்பட்ட சாதிகளின் மேல் இந்தியா முழுமைக்கும் பாய்ச்சியது எனினும் பார்ப்பனர் அல்லாதோர் அதிக அளவில் இருக்கும் சென்னை மாகாணத்தில் மட்டும் 89 சாதிகள் அவர்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் பகைமை பாராட்ட ஏதுவாக இப்பட்டியலில் இருந்தன. அதில் குறவர், உப்புக் குறவர், ஆத்தூர் மேல்நாட்டுக் குறவர், சி.கே. குறவர், ஒட்டர், போயர், வன்னியர், படையாச்சி, புலையர், அம்பலக்காரர், புன்னன் வேட்டுவக் கவுண்டர், வேட்டைக்காரர், பறையர், ஊராளிக் கவுண்டர், டொம்பர், கேப்மாரி, தொட்டிய நாயக்கர், தெலுங்கம்பட்டி செட்டியார், தலையாரி, இஞ்சிக்குறவர் போன்ற ஜாதிகளும் அடங்காத, அடங்க மறுக்கும் ஜாதிகளும் குற்றப் பரம்பரைப் பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தன.



சில பழங்குடிகள்மீது மட்டும் இந்த குற்றவியல் பரம்பரைச் சட்டத்தை திணித்ததற்குக் காரணம், பல்வேறு சாதி, மதம், இனம், மொழி, பண்பாடு முதலியவற்றைக் கொண்ட இந்திய துணைக்கண்டத்தை தமது ஆட்சி வளையத்திற்குள் கொண்டுவருவதற்காக செய்யப்பட்ட பல தந்திரங்களில் பிரிட்டிஷார் அதிர்ந்த விடயங்கள் என்பதற்கு சில இனக் குழுக்கள் தங்களது நலனுக்கு எதிரானவர்கள் என்பதுமட்டுமன்றி 1885இல் சந்தால் இன மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டம் வங்காளத்திலும், பீகாரிலும் பல பகுதிகளை ஆங்கிலேயர்களின் நிர்வாகத்திலிருந்து இரண்டாண்டுகள் பின்வாங்கும் அளவுக்குப் போர்க்குணத்துடன் நடைபெற்றதை, திலீப் டிசௌசாவின் ‘குற்றமுத்திரை’ நூல்வழியே நமக்கு ஆதாரம். எனவே, தொடர்ச்சியான வலுவான ஆட்சியை நிலைநிறுத்தச் சில தொல்குடிகளைச் ‘சட்டம்& ஒழுங்கு’ என்னும் அதிகாரத்துக்குள் பிரிட்டிஷார் ஒடுக்கி வைத்தனர் எனலாம்.

நாம் இங்கே ஒன்றை கவனிக்க வேண்டும் மேலே சொல்லப்பட்ட சென்னை மாகாணத்தின் சாதிகள் அனைத்தும் ஒருவேளை கைரேகை வைக்கப்படச் சொல்லி கட்டாயப்படுத்தப்பட்டிருப்பார்களேயானால் தமிழ்நாட்டில் அப்போதிருந்த மக்கள் தொகை முழுதும் சுமார் இரண்டரை கோடிப் பேர் தினமும் சென்று அந்தந்த சாதிய தலைவர்களிடம் இருக்கும் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டிருக்க வேண்டும் ஆதலால்; அப்படியேதும் நடக்கவில்லை. மாறாக இந்தச் சிக்கலை தவிர்க்கவும் அந்தந்தச் சாதிகளுக்குள்ளாகவே கலவரத்தைத் தூண்ட ஏதுவாகவும் ஒரு சில சாதிகளை தவிர்த்துவிட்டார்கள். அதாவது விவசாய நிலம் வைத்திருந்த விவசாயிகள், நிலவரி கட்டுபவர்கள், நிரந்தரத் தொழில் செய்வோர், அலுவலர், நிரந்தரமாக ஒரே இடத்தில் வசிப்போர் கள்ளர், மறவர், அகமுடையார்களிலும் பெரும்பான்மையோர் கைரேகைச் சட்டத்தில் இணைக்கப்படவில்லை. இந்தக் கொடூரச் சட்டத்தை 1911இல் இந்தியா முழுமைக்கும் நடைமுறைப்படுத்த அமைக்கப்பட்ட குழுவின் பொறுப்பாளர் தமிழ்நாட்டுப் பார்ப்பானான இராமானுஜ அய்யங்கார் என்பது குறிப்பிடத்தக்கது.

**– தொடரும்**



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்: மனிதன் எழுதாத கடவுள் கதை எது?



# “சோடா வேணும்...”

அதிகாலை மூணு மணி கதவைத் தட்டும் சத்தம். அரைத்தூக்கத்தோடு முனியம்மாள் “யாரது என்ன வேணும்’’னு கேக்க... “அண்ணி ணா சகுந்தலா புள்ளைக்கு வயிறு வலிக்குதாம் கத்திட்டே இருக்கு ஒரு சோடா வேணும் கொஞ்சம் சிரமம் பார்க்காமல் தா அண்ணி”னு சகுந்தலா பக்குவமா கேக்க... ஒரு மனுசன நிம்மதியா தூங்க விடலனாலும் அரைகுறையாச்சும் தூங்க விடமாட்டிங்கலானு புலம்பியபடியே ‘‘கடையாண்டபோ நா வரேன்’’னு சொல்லிட்டு... சாவி கொத்த கையில் எடுத்துக்கிட்டு கையில் ஒரு டார்ச் லைட்ட எடுத்துட்டு விறுவிறுன்னு புறப்பட்டாள் முனியம்மாள்...

கடையாண்ட போய் பார்த்தால் இவ்வளவு நேரத்துக்கே ஊரில் உள்ள பெரிய மனிதர்கள் தேனீருக்காகக் காத்திருந்தார்கள்; அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் “தூக்கம் வரல மா ஒரு டீ போட்டு தா மா”னு கேட்க... சோடாவை சகுந்தலாவிடம்கொடுத்துவிட்டுகடையை முழுமையாகத் திறந்து கடைக்கு முன் வாசல் தெளித்து கோலம் போட்டுவிட்டு டீ போட அடுப்பை பற்றவைக்க மணி நான்கு... அப்படியே பால் காஞ்சிட்டு இருக்கும்போதே “எவ்வளவு நேரம்மா போடுற”னு ஒரு குரல் கேட்க... “இதோ ஆச்சி ப்பா..! தரேன்”னு டீ யைசூடா சுவையா போட்டு நீட்டினாள்... முனியாண்டி குடிப்பதற்குள் எனக்கு “ஒரு அரை சக்கரை;” “எனக்கு சக்கரை இல்லாமல் காப்பி ஒன்னு,” “லைட் ஆ ஒரு டீ, ஸ்ட்ராங் ஆ ஒரு டீ”னு ஒருபுறம் ஆர்டர் வர மறுபுறம் அக்கா “உப்பு ஒரு பாக்கெட் வேணும், மிளகா ரெண்டுரூபாய்க்கு வேணும்’’னு கேட்க யாருக்கு முதலா குடுக்கனு யோசிப்பதற்குள் கடைக்கு வந்தவர்கள் “எனக்கு சீக்கிரம் கொடுங்க”னு கேட்க... “எனக்கு என்ன பத்து கையா இருக்கு இருமா தரேன்’’னு முணுமுணுத்தப்படி டீ யை போட்டு முடித்துவிட்டு கடைக்கு வந்தாள் முனியம்மாள்...

“உப்பு ஒரு பாக்கெட், பச்சை மிளகாய் ரெண்டுரூபாய்க்கு வேற’’ என்று முனியம்மாள் கேட்க..; ‘‘அக்கா பச்சை மிளகாய் அஞ்சி ரூபாய்க்கா கொடுத்திடுங்க”னு சொல்ல “காலைலையே இப்படியா” என்று சலித்துக்கொண்டே மாற்றிக் கொடுத்தால் அதற்குள் வயதான பாட்டி ஒருவர், “இந்தாடி புள்ள ஒரு நெருப்பெட்டி குடு டி”னு சத்தம் போட ஓடி போய் நெருப்பெட்டியை கிழவியிடம் கொடுத்துவிட்டு முதல் ஒரு ரூபாயை பெற்று தன் கல்லாவில் போட்டாள். அதற்குள் முன்பு வந்தவர் “எவ்வளவு நேரமா நிக்கறது எனக்கு முதல்ல கொடுமா நா போறேன் பின்னாடி வர்றவங்களுக்கு முன்னாடி கொடுத்தா எப்படி”னு சங்கடப்பட, அதற்குள் பில்லைபோட்டுவைத்தால் கடைக்காரி முனியம்மாள். “150 ரூபாயா அவ்வளவு இல்ல காலைலயே கடன் வச்சா நல்லா இருக்காது 50 தறேன் 100 கடன் வச்சிக்கோ”னு சொல்ல... கடன் வச்சா கடை நல்ல இருக்காது. அது காலையில வச்சா என்ன மாலையில வச்சா என்ன என்று பகுத்தறிவாகப் பேசினாள் கடைக்காரி...

இந்த பஞ்சாயத்துகள் ஒருபுறம் ஓடிக்கொண்டு இருக்க பள்ளிக்கூடம் திறக்கும் நேரம் ஆனது. ஊரின் கதாநாயகர்கள் கூட்டம் கூட்டமாக சட்டைப்பையில் ஒரு ரூபாய், ரெண்டு ரூபாய், அஞ்சு ரூபாய் என விதவிதமா கொண்டு வந்தார்கள்... முனியம்மாவின் முகத்தில் எதோ ஒரு பயம். என்னவாக இருக்கும் என்று யோசிப்பதற்குள் அந்த நிகழ்வுகள் அரங்கேறின... “என்னடா வேணும்”னு கேட்க... “ஒருத்தன் எனக்குப் ஓரியோ பிஸ்கட் எனக்கு டைகர் கிரீம் பிஸ்கட் எனக்கு நிப்பெட் வேணும்”னு மாத்தி மாத்தி கேட்க... “முதலில் யாரு எவ்வளவு வச்சி இருக்கிங்கனு சொல்லுங்கஅப்புறம் தரேன்’’னு பார்த்தா யார் கையையும் பெரிய பணம்

எப்படியோ சமைத்து முடித்து அவள் சோற்றில் கை வைக்கும்போது நேரம் காலை பத்து மணி. முதல் வாய் சோற்றை வைத்தாள். “அக்கா பெட்ரோல் வேணும்”னு ஒரு வண்டி சத்தம் கேட்க “இந்த வீட்டுல ஒருவாய் சோறு கூட ஒழுங்கா சாப்பிட முடியாது” என்றபடி பெட்ரோலை ஊற்றிக் கொடுத்தாள்.

## மு.சி.அறிவழகன்



இல்லை. ஒன்னு, ரெண்டு, அஞ்சுனுதான் இருந்துச்சி. பொறுமையா “இந்த காசுக்கு இதுலா வராது போய் பெரிய நோட்டு காசா வாங்கிட்டு வாங்க அப்போ அதுலா தரேன் இப்போ சாக்லேட் வாங்கிக்கோங்க” னு கொடுத்து அனுப்புறதுக்குள்ள அவள் உயிர் அவள் கையில் இல்லை; தனியா ஒருத்தன் எதையோ யோசித்துக்கொண்டு இருப்பதை பார்த்த முனியம்மாள் “உனக்கு என்னடா வேணும் தம்பி”னு கேட்க... “அக்கா எனக்கு அது வேணும்”னு தன் வலது கையை நீட்டினான் குட்டி பையன், என்ன காட்டுகிறான் என்று திரும்பி பார்த்தல் முனியம்மாள். அவன் காட்டியதை அவளால் கொடுக்க முடியவில்லை அவனை எப்படி சமாளிப்பது என்றும் அவளுக்கு புரிவில்லை, அவன் காட்டியது பெண்கள் மாதவிடாய் காலத்தில் பயன்படுத்தும் ஸ்டேப்ரீ. ஒரு வழியா “அது விக்கிறதுக்கு இல்ல”ன்னு கடைக்காரி சொல்ல... “விக்கறதுக்கு இல்லனா எதுக்கு கடைல வச்சி இருக்கீங்க”னு குட்டி பையன் திருப்பி கேட்க.. பேச முடியாமல் கோபமாக “என்ன மிட்டாய் வேணும்”னு கேட்க... “பப்ளிக்காம் வேணும்” சொன்னான் அந்த பையன்; “முடிஞ்சது டா”னு பெருமூச்சி விட்டப்படி சமைக்கத் துவங்கினாள். எப்படியோ சமைத்து முடித்து அவள் சோற்றில் கை வைக்கும்போது நேரம் காலை பத்து மணி. முதல் வாய் சோற்றை வைத்தாள்.

“அக்கா பெட்ரோல் வேணும்”னு ஒரு வண்டி சத்தம் கேட்க “இந்த வீட்டுல ஒருவாய் சோறு கூட ஒழுங்கா சாப்பிட முடியாது” என்றபடி பெட்ரோலை ஊற்றிக் கொடுத்தாள். வண்டிக்காரன் பெட்ரோலைப் பெற்றுக்கொண்டு அதற்கானப் பணத்தைக் கொடுத்துவிட்டு சிட்டாய்ப் பறந்தான். மீண்டும் கையைக் கழுவிக்கொண்டு சோற்றில் கையை வைத்தாள். இரண்டு மூன்று வாய் சோற்றை சாப்பிடுவதற்குள் அடுத்த ஆள் கடைக்கு வந்ததால் அவளால் முழுமையாகச் சாப்பிட முடியவில்லை... அரை வயத்தோடு மீண்டும் கடைக்கு சென்றாள் முனியம்மாள்...

நேரம் ஒன்னு... ரெண்டுமூணு எனமணி கடந்தது... மணி அஞ்சுஆனது. கடையில் கூட்டம் அதிகமானது, அதே நேரம் தோசை மாவு ஆட்டுவதற்காக பலர் வரிசையாகக் காத்து இருந்தனர். எதைமுதலில் செய்வது என்று புரியாமல் காத்திருந்த வேலையில் தன்னுடைய கணவர் விவசாயத்தில் இருந்து வந்ததும் மகிழ்ச்சி அடைந்தாள்; கணவர் அரிசியை அரைத்து மாவாக கொடுக்க இவளோ கடையில் மக்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களைக் கொடுத்து வந்தாள். கல்லூரிக்குச்சென்று இருந்த மகன் வருவதைக்கண்டு கூடுதல் மகிழ்ச்சி அடைந்தாள் கடைக்காரி முனியம்மாள். ஆனால் மகனோ எந்த வேலையும் செய்ய மாட்டேன் என்று ஊர் சுத்தக் கிளம்பினான். எப்போது நம் குடும்ப கஷ்டம் புரியுமோ என்றப்படிவருந்திக்கொண்டே விற்பனை செய்துகொண்டு இருந்தாள். நேரம் இரவு பத்தைக் கடந்தது...

காலையில் டீ போடுவதற்காகப் பதமாகப் பாலைக்காய்ச்சி வைத்துவிட்டு இரவு உணவை சமைக்கத் துவங்கினாள்; இரவு உணவை பதினொரு மணிக்கு குடும்பத்தோடு சாப்பிட்டுவிட்டு, அடுத்தநாள் விடியலை நோக்கி உறங்கச் சென்றாள்கடைக்காரி முனியம்மாள்..!

**(விரைவில் வெளிவரவிருக்கும் ‘தினக்கூலி’ புத்தகத்திலிருந்து)**

## பேரா. பழ.வெங்கடாசலம்

**மேஜிக் கலைஞர்**

# மந்திரமா? தந்திரமா?



### டம்ளரில் உள்ள நெல்லில் பென்சிலால் குத்தி தூக்கினால் டம்ளர் அப்படியே மேலே வரும்

**தேவையானப் பொருட்கள்**

ஒரு டம்ளர் அதில் நிறைய நெல்

**மேஜிக் செய்யும் முறை**

பார்வையாளர்களிடம் டம்ளரை முதலில் காண்பிக்கவும். பின்னர் நெல்லை டம்ளர் நிறைய போடவும்.


கையில் உள்ள பென்சில் அல்லது சிறிய குச்சியை எடுத்துக் காட்டவும். அதை நெல்லை குத்தி அரிசி ஆக்கலாம். கைக்குத்தல் அரிசி சிறந்தது. என பேசிக்கோண்டு குச்சியால் குத்திக் காட்டவும். குச்சியை தூக்கினால் குச்சி மட்டும் தனியே வந்து விடும்.

இப்போது மந்திரம் போடுவது போல் பலமுறை குச்சியால் குத்திக் கொண்டே இருக்கவும். கடைசியில் வேகமாக குத்தி மேலே எடுக்க குச்சியுடன் நெல்லுடன் டம்ளருடன் ஒட்டிக்கொண்டு வரும். அப்படியே குச்சியை பிடித்து நேராக தூக்கிக் காட்டவும். குச்சியோடு டம்ளர் ஒட்டிக்கொண்டு வரும். இதைப் பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருக்கும்.

**மேஜிக் இரகசியம்**

டம்ளரில் உள்ள நெல்லை குத்தும் போது செரிவு காரணமாக குத்திய குச்சியுடன் கெட்டியாக பிடித்துக் கொள்ளும்.

**குறிப்பு:** குச்சி கம்பி கத்தி இவற்றில் ஏதேனும் ஒன்றை பயன் படுத்தி முன்னதாக செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். ●





பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
கடவுள் படங்களை நாத்திகர்கள் கொளுத்தினால் அலறும் பக்தர்கள், கடவுள் படம் போட்ட பட்டாசுகளைக் கொளுத்தலாமா?

# எச்சில் தொட்டி

வேன் கிளம்பிப் போவதை கண்களில் வழிந்தோடிய கண்ணீரோடு அமாவாசையின் மனைவியும் குழந்தையும் அவனது சகாக்களின் குடும்பத்தாரும் மனதில் ஒருவித வலியுடனே கைகளை அசைத்து வழியனுப்பி வைத்தனர்.

“உடம்பை பத்திரமா பாத்துக்க மாமா, உடம்பை பத்திரமா பாத்துக்க மாமா” என அமாவாசையின் மனைவி முணு முணுத்தபடியே கண்களில் கண்ணீர் பெருக்கோடு கைகளை அசைத்து சோர்ந்துபோனாள்.

“மாமனோட ஒடம்பு எப்படி மெலிஞ்சி போச்சி. வேளா வேளைக்கு சோறு திங்குமோ திங்காதோ தெரியலயே. மொகத்துல சவரம் பண்ணாம தாடி ரொம்ப வளந்து கெடக்கு. ஐயனார் சாமிகணக்கா கம்பீரமா நடந்து வருமே இப்ப கண்னெல்லாம் உள்ளபோயி ஒடம்பெல்லாம் மெலிஞ்சி போயி எஞ்சாமி பாக்கவே ரொம்ப பாவமாத்தான் இருக்குது” என்று புலம்பியவாறே குழந்தையைக் கையில் பிடித்துக்கொண்டு உடன் வந்த உறவுகளோடு ஊருக்குக் கிளம்பினாள்.

வேன் நன்றாக வேகம் பிடித்துப் போய்க் கொண்டிருந்தது.

“சார் எங்காவது ஒரு நல்ல ஓட்டல் ல பாத்து நிறுத்துங்க சாப்பிட்டு போகலாம் வயிறெல்லாம் கொலை பசியா கெடக்குது” என்றார் பாதுகாப்புக்கு வந்த போலீஸ் அதிகாரி.

“ம் சரிங்க சார்” என்றவாறு வண்டியை கொஞ்சம் வேகத்தை குறைத்து ஓட்டினார்.

“சார் நாம வழக்கமா சாப்பிடுவமே அந்த கடைல சாப்பிடலாமே!?”

“ம் சரிங்க சார் அங்கயே போயிடுங்க”

அஞ்சு நிமிட ஓட்டத்திற்குப் பிறகு அந்தக் கறிச்சோறுக் கடை வந்தது.

“எல்லாரும் இறங்குங்கப்பா சாப்பிடலாம் வாங்க” என்றழைத்தார் பாதுகாப்பு அதிகாரி.

“டு நாட் த்ரீ அவங்க ஹேண்ட் கப்பை கழட்டி விடுங்க அவங்களும் சாப்பிடனும் இல்ல”

“ம் ஓகே சார்”

“இறங்குப்பா வாங்க” என்று அமாவாசை வகையறாக்களையும் உடன் வந்த நபர்களையும் இறக்கிவிட்டனர்.

கடைக்குள் நுழைந்ததும் கமகமவென்ற கறிக்குழம்பு வாசனை.

“மாப்ள நம்ம கறி வாசனையாட்டம் வருது” என்றான் அமாவாசையிடம்.

“அப்படித்தான் தெரியுது மாப்ள பாக்கலாம்”

“நாக்கெல்லாம் ருசிகெட்டு போச்சு மாப்ள சாப்டணும் போல இருக்குது”



“நாம இப்ப சாப்பிட முடியுமா?”

“சாப்பாட்டு படி எவ்வளவு குடுத்தாங்கனு தெரியல இரு கேட்டு பாப்போம்”

“சார் இது கறிச்சோறு கடை நாங்களும் சாப்பிடற அளவு சாப்பிட காசு இருக்கா சார்” என்றான் அமாவாசை

“தாராளமா சாப்பிடுங்க வயிறார காசு பத்தலைனா என்ன என்கிட்ட இருக்கு சாப்பிடலாம்”

“இல்ல சார் உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்”

“அட அதெல்லாம் ஒன்னுமில்லப்பா சாப்பிடுங்க”

காவலுக்கு வெளியே இரண்டுபேர் நின்றுகொள்ள மீதமுள்ளவர்கள் சாப்பிடத் துவங்கினர் சாப்பாடும் மாட்டுக்கறியும்.

“மாப்ள என்ன இருந்தாலும் நம்ம கறி நம்ம கறிதான் மாப்ள இந்த நெஞ்செலும்பை கடிச்சி மெல்லுற சொகம் இருக்குது பாரு அப்படிதான் இருக்குது”

“யோவ் என்னப்பா சாப்புடற கறியில கூட உங்க கறி எங்க கறி னு பேசிகிட்டு இந்த கறி உழைக்கும் மக்களோட கறிப்பா மாட்டுக்கறி திங்கறதால எந்த கேடும் வந்திடபோறதில்ல. ஒழைக்காம அடுத்தவனோட ஒழைப்பை சொரண்டி திங்கறவனுக்கு த்தான் மாட்டுக்கறிய தின்னாக்க செரிமானம் ஆகாது. நம்மளாட்டம் ஒழைக்கற மக்களுக்கு இந்த கறிய தின்னாத்தான் ஒழைக்கவே முடியும். மாட்டுக்கறிய திங்குறவனெல்லாம் தீண்டத்தகாதவன்னு ஒரு சில அயோக்கியனுங்க சொல்றதுக்கான காரணங்கள் வேற அதப்பத்தி பேசுனா. ரொம்ப நேரம் பேசணும் உலக அளவில் மாட்டிறைச்சி தான் ரொம்ப விரும்பி சாப்பிடக்கூடிய உணவா இருக்குது பெருமளவு உணவு பற்றாக்குறைய சரி பன்றதும் இந்த மாட்டிறைச்சி தான்.

மண்வெட்டி பிடிச்சி வேலை பாக்கறது துவங்கி பட்டறையில வேலை பாக்கவங்க மூட்டை சுமக்கறவங்க கல் மண் சுமந்து கட்டுமான வேலைகளை செய்ற மக்களுக்கெல்லாம் மாட்டிறைச்சி சாப்பிட்டாதான் தொடர்ந்து ஒழைக்க முடியும்.

நாலு சுவத்துக்குள்ள கைல புடிச்சி ஆட்டிகிட்டு தட்டெடுத்து பிச்சையெடுக்கற நாய்களுக்கு இதை தின்னா செரிமானம் ஆகுமா?

ஆகாது அந்த பழக்கம் இப்ப ஆண்டசாதி பேண்ட சாதி பெரும பேசற நாயிங்களுக்கும் ஒட்டிகிச்சி.

நம்ம பக்கத்து மாநிலம் கேரளாவுல பாரு மாட்டுக்கறிதான் பிரதான உணவே ஆனா நம்ம ஊருல மாட்டுக்கறி திங்கறவனை சின்ன சாதியாவும் தொட்டா தீட்டுன்னும் பேசுவானுக.

இந்த நாயிங்க மட்டுமில்ல ரேசன் அரிசிக்கே வக்கத்தவன் கூட நாங்கெல்லாம் மாட்டுக்கறி திங்கறவங்களோட பொழங்க மாட்டம்னு பெரும மசுறா பேசிகிட்டு திரியுறானுங்க. அடுத்த வேளை சோத்துக்கு வழியிருக்குதோ இல்லையோ சாதிப்பெருமை மசுருக்கொன்னும் கொறைச்சலில்ல இவனுக கிட்ட.

ஏன்னா நம்ம நாட்டு டிசைன் அப்படி. சாப்புடுற உணவுலகூட சாதி பாக்குற அயோக்கியத்தனம் நம்ம நாட்டுல தானப்பா” பேசிகொண்டே சாப்பிட்டு முடித்தனர்

**17**



எல்லோரும் சாப்பிட்டு முடித்து வேன் கிளம்பியது

வழியில் போக்குவரத்து நெரிசல் விண்ணை பிளக்கும் அளவு மத்திய மாநில அரசுகளைக் கண்டித்து கோசம் காதுகளைத் துளைத்தது.

என்னவென்று ஆவலாய் சாலையோரத்தினை எட்டிப்பார்த்தனர்.

“மத்திய அரசே மத்திய அரசே அழிக்காதே அழிக்காதே இயற்கை வளத்தை அழிக்காதே போடாதே போடாதே எட்டுவழிச்சாலை போடாதே” என பாமர விவசாயிகள் தன் மண்ணையும் மக்களையும் பாதுகாத்திட உரிமை மீட்பு முழக்கமாய் முழங்கிகொண்டிருந்தனர்

ஆனாலும் காவல் துறையானது வயதான ஆண் பெண் என்ற பாரபட்சம் இல்லாமல் அடித்து தரதரவென இழுத்து போலீஸ்வேனில் ஏற்றிய வண்ணம் இருந்தனர்.

இந்த தேசத்துல மண்ணையும் மக்களையும் நேசிக்கறவன் தான் தீவிரவாதி.

அரசு அரசின் ஏவல் துறையான காவல்துறை ஒருக்காலமும் உண்டு கொழுத்தவனை அடித்ததாகவோ வதைத்ததாகவோ அல்லது கைது செய்த்தாகவோ வரலாறு இல்லை.

பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலமும் இயற்கை வனமும் அழிந்து போனால் சோறு திங்கறதுக்கு பதிலா பீய அள்ளி திம்பானுங்களா. இந்த அயோக்கிய அரசியல் வாதிகளும் பெரு முதலாளிகளும்.

ஏற்கனவே இருந்த வனப்பகுதிகளும் விளை நிலங்களும் ரியல் எஸ்டேட் ங்கற பெயரில் அழித்தாகி விட்டது இனியும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலத்தை அழிச்சுபுட்டு சோத்துக்கு மக்களை நடுத்தெருவில் நிறுத்தவா இந்த எட்டுவழிச்சாலை.

இதையெல்லாம் எவனும் எதிர்த்து கேள்வி கேட்டிட கூடாது காக்கை குருவியை சுடுவதைபோல அரசு சுடும் சுட்டு கொல்லும்.

ஹைட்ரோ கார்பன் ஸ்டெர்லைட் கூடன்குளம் போன்றவைகளால் இந்த மக்களுக்கு என்ன லாபம் இயற்கையை சார்ந்து வாழ்ந்த இந்த மக்களின் வாழ்வாதாரம் என்பது நிலம் நீர் விவசாயம் உற்பத்தி விளைச்சல் இதுதானே இன்றியமையாத தேவை. தற்போதைய நிலவரப்படியே முப்போகம் நெல் விளைந்த தஞ்சை மற்றும் இதர டெல்டா பகுதி நீர் வரத்தின்றி கழனிகள் காய்ந்துபோய் அரிசியை பக்கத்து மாநிலத்திலும் பக்கத்து நாடுகளிலும் வாங்கி உண்ணவேண்டிய நிலைக்கு வந்தாகிவிட்டது. இருக்கற கொஞ்சம் நிலங்களையும் அழிச்சுபிட்டு தின்ன சோறுஇல்லாம சோமாலிய மக்களைப்போல குடல் வற்றிப்போய் சாகவேண்டும். உண்டு கொழுத்த பண முதலைகள் எங்கோ ஒரு நாட்டில் உட்கார்ந்துகொண்டு கொழுத்து திரியும்'' தனக்குள்ளாகவே புலம்பியபடி ஆற்றாமையில் பற்களை நரநரவென கடித்தபடி அமாவாசை புலம்பிக் கொண்டிருந்தான்

வேன் மத்திய சிறைச்சாலைக்குள் நுழைந்தது

**- தொடரும்**



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்

“திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும்” என்று கூறும் பக்தர்கள், பல் விளக்காமல் இருப்பார்களா?

கவிஞர். நா.காமராசன் மண்டகொளத்தூர்

# நதியோடிய இடமெல்லாம்...



பெருவெள்ளம் ஓய்ந்த
அன்றொரு நாள்;
வகிடெடுத்து வாரியிருந்தது
நதி மணல்!

கொடிபடர்ந்த தும்மட்டிக் கொடியும்
தலையசைத்த நாணலும்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
தவித்துக் கிடந்தது!

கிளிஞ்சல்களும் கூழாங்கற்களும்
திட்டுத்திட்டாய் சிதறிக்கிடந்தது
பொங்கிவந்த பெருவெள்ளத்தில்!

தெளிந்த நீரோடையாய்
தெற்கு படித்துறையோரம்
சலசலத்து ஓடுகிறது
பெருநதி இப்போது சிறுநதியாய்!

கோரைப்புற்களிலும்
ஓணாங்கொடிகளிலும்
கண்ணாமுச்சியாடி
துள்ளிக் குதித்து வரும்!

மீசைவெச்ச கெளுத்தியும்
மினுமினுக்கும் கெண்டையும்
அலைஅலையாய் முன்னேறும்
ஆடிவரும் ஆற்றுநீரில்!

மேற்கால படித்துறையில்
அய்யர்வீட்டு மாமியும்
கெழக்காலே படித்துறையில்
கீழைவீட்டு குப்பியும்
துவைத்த துணியெல்லாம்
வெள்ளைக் கொடியாய்
தோரணமாய் பறக்கிறது
நாணல் வளைந்திருக்கும்
ஆற்றங்கரையோரம்!

கரையெல்லாம் செண்பகப்பூ
வளைந்திருக்கும் தென்னைமரம்
நீருக்குப் பூச்சூடி
நித்தம் நித்தம் ஓடிவரும்!

செங்கல் நாரை
கொத்திப் பறக்கும்!
தூக்கணாங்குருவி
ஊஞ்சலாடும்!

அயிரை மீன்கள்
துள்ளி குதிக்கும்!

ஆங்காங்கே மணல்வீடு
அழகழகாய் பூத்திருக்கும்
அந்திப் பொழுது வந்தால்
அத்தனையும் சரிந்திருக்கும்!

இதோ நதிக்கரைப் பயணம்
படித்துறைக்கற்கள்
ஒன்றுமில்லை
ஆற்றுக்குப் போகும்
பாதையுமில்லை!

அள்ளிக்குடிக்க கைகள்
இருக்கு!
துள்ளியோடும் வெள்ளமில்லை!
விளையாட கால்கள் இருக்கு
அலையாடும் நதிகளில்லை!

நதியோடிய இடமெல்லாம்
இன்று நரியோடுகிறது
சுரண்டல் நரியோடுகிறது!





பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள் பிள்ளையார் போல் குழந்தை பிறந்தால் பக்தர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

## தந்தை பெரியார் 140வது பிறந்தநாள் வாழ்த்துகள்!

எங்கள்
இனத்திற்காக...
தன் வாழ்நாள் முழுவதும்
கறுப்புச் சட்டையை அணிந்த
வெண்தாடி வேந்தனே..!

கறுப்பு மனிதர்களே
வெறுத்து ஒதுக்கிய அந்த
கறுப்பையும்...
ஒரு நிறமாக்கி தந்தவர் நீர்தானே..!

தன் வாழ்நாள் முழுவதும்
தனக்காக வாழாமல்
பிறர்க்காக வாழ்ந்த
மாமனிதர்..!

எம் பெரியாரை
இந்நாளில் வாழ்த்துகிறேன்..!

அன்புடன்

**Ln.Dr.ஜெ.ரமாபிரபா**
(அழகுக்கலை நிபுணர்)
மண்டல மகளிரணிச் செயலாளர்,
திராவிடர் கழகம், வடலூர்.



## பிரபா பியூட்டி வேல்டு A/c

அரசு அங்கீகாரம் பெற்ற
பெண்களுக்கான பிரத்யேக அழகு நிலையம்
சபை பஸ் ஸ்டாப், வடலூர்.

- அனைத்து வகையான Facial
- Bleach, திரெட்டிங்
- Hair Coloring, Hair Style, Oil Massage
- முடி உதிர்வதை தடுத்தல்
- மணப்பெண் அலங்காரம்

இவை அனைத்தும் Skin Test செய்த பின் செய்யப்படும்.

### அழகுக்கலை பயிற்சி

அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்
நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

இன்றே சேருவீர்

தங்களின் வருமானத்தை
பெருக்கிக் கொள்வீர்!

## பிரபா லேடிஸ் ஜிம்

முற்றிலும் பெண்களுக்கான ஒரு அழகு களஞ்சியம்

தங்களின் ஆரோக்கியத்திற்கும்,
அழகுக்கும் உடல் அமைப்பிற்கும்,
உடல் பருமனை குறைக்கவும்,
அதிநவீன முறையில் லேடிஸ் ஜிம்
அமைக்கப்பட்டுள்ளது.

இன்றே நாடுவீர்! பயன் பெறுவீர்!!

போன்: **9788217168**
E-Mail: ramapraba101092@gmail.com




பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
"நோய்கள் கடவுள் கொடுக்கும் தண்டனையே" என்று கூறும் பக்தர்கள்,
நோய் வந்தவுடன் மருத்துவரிடம் ஓடுவது ஏன்?



# பெரியாரை அறியார் யார்?

தமிழினத்தின் முதல் விடியல் முழக்கமவர்
இந்தியை விரட்டிய விடுதலைச்சுடர்
பகுத்தறிவு புகுத்திய பறையிசையவர்
பெண்ணியம் போற்றிய மானுடநேயர்.

இதிகாசத்தை ஏசியவர் எரித்தவர்.
சாதியை சாடியவர் சங்கறுத்தவர்
மதங்களை எதிர்த்தவர் எச்சரித்தவர்
மூடநம்பிக்கையை முனையறுத்தவர் முடக்கியவர்.

முதுமையிலும் தொண்டாற்றிய தொடர்நூல்
பெரியார் எங்களுக்கு நீதிநெறி நூல்
பெரியாரை இகழ்ந்தது பூணூல்
இன்றுவரை இகழுது பூணூல்
கருஞ்சட்டையை வழிநடத்தும் உரைநூல்
ஈ.வெ.ரா.வே நமக்கான வாழ்வில் நூல்.......

சொல்லினில் வரலாறு
வாழ்வினில் சிக்கனம் காட்டினாரு
மாற்றத்தை தன்னிடமிருந்தே ஆரம்பித்தாரு
அனைவருக்கும் சுயமரியாதையை
அறிமுகப்படுத்தியவரு.

பெரியார் கழகத்தின் நெறியை படி
பெரியார் கருத்தியலை நிறைய படி
பெரியார் கருத்தின் நிழலையும் படி
பெரியார் கற்பித்தலின் நிரலை படி..
நி(நெ)றைய படி...
நிறைவா படி....

அந்த
பாவி யார்?
காவி யார்?
ஆவி யார்?

சிதறிக் கிடந்தவனை
சிந்தனை பாய்ச்சினார்
சொரணை அற்றவனை
சோஷியலிசத்தால் உசுப்பினார்.

மானுட எழுச்சிக்கும்
மீட்சிக்கும் நீட்சிக்கும்
உலகில் பெரிய ஆயுதம்
பெரியார் ஆயுதம்.

ஈரோட்டு கல்வி வேந்தர்
ஈரடி தாடி கொண்டவர்
பெரிய கைத்தடி உடையவர்
பேராற்றல் மனதில் உள்ளவர்.



என்றும்: பூ.ஆசு. சிங்கப்பூர்



# பெண் விடுதலை

சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் 'ஆண்மை'க்குத்தான் உரியதாக்கப் பட்டுவிட்டன. 'ஆண்மை'க்குத்தான் அவைகள் உண்டு என்று ஆண் மக்கள் முடிவு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தில் இந்த 'ஆண்மை' மேலோங்கி நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் ஆண்மை என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலன்றி பெண்களுக்கு விடுதலையில்லை என்பது உறுதி.

(கு.12.8.28)



## பெண்ணுரிமை போராளி 'தந்தை பெரியார்' 140வது பிறந்தநாள் வாழ்த்துகள்!



**கோ.செந்தமிழ்ச்செல்வி**

மாநில செயலாளர்,
திராவிடர் மகளிர் பாசறை

வாழ்த்துகளுடன்...
திராவிடர் கழக மகளிரணி, மகளிர் பாசறை.




அச்சிடப்பட்ட செய்திநூல் அஞ்சல் – தனிச்சுற்று

PRINTED MAGAZINE BOOK POST - PRIVATE CIRCULATION


FROM
ARIVAZHAGAN CM
Editor & Publisher
kaithadi Monthly
2/343, Kamalapuram Village
Mallikuttai Post,
Karimangalam
Dharmapuri - 635 205
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com


Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.